




ISSN: 2582–5518

# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351









## கார்த்திகை தீபத் திருவிழா : மலை உச்சிக்கு கொண்டு செல்லப்பட்டது கொப்பரை

# மகா தீபம்

**கார்த்திகை தீப திருவிழாவில் பல்வேறு மாநிலம் மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் சுமார் 35 லட்சம் பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. 5 அடுக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.**

திருவண்ணாமலை, நவ. 26–

**திருவண்ணாமலையில் இன்று மகா தீபம் ஏற்றப்பட உள்ள நிலையில், அண்ணாமலை உச்சிக்கு மகா தீபம் ஏற்ற பயன்படுத்தப்படும் கொப்பரை கொண்டு செல்லப்பட்டது.**

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் கார்த்திகைத் தீபத் திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகிறது. இவ்விழாவின் முக்கிய நிகழ்வான மகா தீபம் இன்று ஏற்றப்பட உள்ளது. 2,668 அடி உயரம் உள்ள அண்ணாமலை உச்சியில் மாலை6மணிக்குமகாதீபம் ஏற்றப்படும். இதற்கான கொப்பரை 5 அடி 9 அங்குலம் உயரமும், 225 கிலோ எடையில், செப்பு




உள்ளிட்ட உலோகத்தில் செய்யப்பட்டுள்ளது. கொப்பரையில் சிவ சிவ என எழுதியும், அர்த்தநாரீஸ்வரர் ஓவியமும் வரையப்பட்டுள்ளது. தீபம் ஏற்ற 1,100 மீட்டர் காடா துணி மற்றும் 4,500 கிலோ நெய் பயன்படுத்தப்பட உள்ளன.

இந்நிலையில், மகா தீப கொப்பரை நேற்று மலை உச்சிக்கு கொண்டு செல்லப்பட்டது. முன்னதாக திருக்கோயிலில் உள்ள கிளி கோபுரத்தின் அருகே உள்ள நந்தி சிலை முன்பு வைக்கப்பட்டு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டது. பின்னர் கொப்பரை மலை உச்சிக்கு கொண்டு செல்லப்பட்டது. அப்போது பக்தர்கள் மற்றும் ஊழியர்கள் அண்ணாமலையாருக்கு அரோகரா, அண்ணாமலையாருக்கு அரோகராஎனபக்தியுடன் தீபகொப்பரையை சுமந்து சென்றனர். மகா தீப தரிசனத்தை தொடர்ந்து 11 நாட்களுக்கு காணலாம்.

கார்த்திகை தீப திருவிழாவில் பல்வேறு மாநிலம் மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் சுமார் 35 லட்சம் பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. 14 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். 5 அடுக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.



▶ சென்னை, கலைவாணர் அரங்கில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு "நிறுவனங்களின் நாயகர் – கலைஞர்" சிறப்பு புகைப்பட கண்காட்சியை, நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் சட்டத் துறை அமைச்சர் எஸ். ரகுபதி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ. அன்பரசன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி. கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா,துணை மேயர் மு.மகேஷ் குமார், டிவிஎஸ் குழுமத்தின் தலைவர் வேணு சீனிவாசன், வேலூர் விஜடி பல்கலைக்கழக வேந்தர் கோ. விசுவநாதன், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் தா.கார்த்திகேயன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் பொன்னையா, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## அர்ச்சகர்களின் பிள்ளைகளுக்கு உயர்கல்வி உதவித் தொகை முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்

சென்னை, நவ. 26–

ஒருகால பூஜை திட்ட கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்களின் பிள்ளைகளுக்கு மேற்படிப்புக்கான கல்வி உதவித் தொகையை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு:

இந்து சமய அறநிலையத்துறை சார்பில் மானிய கோரிக்கையில் அறிவிக்கப்பட்டபடி, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 490 கோயில்களின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு செலவுக்காக தற்போது வழங்கப்பட்டு வரும் அரசு மானியம் ரூ.6 கோடியில் இருந்து ரூ.8 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.



இதற்கான காசோலையை தலைமைச்செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின், சுசீந்திரம், கன்னியாகுமரி மாவட்ட கோயில்களின் அறங்காவலர் குழு தலைவர் கோ.ராமகிருஷ்ணனிடம் வழங்கினார்.

மேலும், ஒருகால பூஜை திட்ட கோயில்களில் பணிபுரிந்து வரும் அர்ச்சகர்களின் மகன் அல்லது மகள்களின் உயர்கல்விக்கான உதவித்தொகை 400 மாணவர்களுக்கு வழங்கும் அடையாளமாக 8 மாணவர்களுக்கு அதற்கான வங்கி வரைவோலைகளை முதல்வர் வழங்கினார். மேலும், கோயில்கள் சார்பில் நடத்தப்படும் பயிற்சிப்பள்ளிகளில் முழு நேரமாகவும், பகுதி நேரமாகவும் பயிலும் மாணவர்களுக்கான ஊக்கத் தொகை ரூ.4 ஆயிரம் மற்றும் ரூ.2 ஆயிரம் என உயர்த்தப்பட்டுள்ளது.

அதன்படி, 292 மாணவர்களுக்குஊக்கத் தொகை வழங்கும் அடையாளமாக 8 மாணவர்களுக்கு அதற்கான வங்கி வரைவோலைகளையும் முதல்வர் வழங்கினார். நிகழ்ச்சியில், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச்செயலர் சிவ்தாஸ் மீனா, துறை செயலர் க.மணிவாசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.




# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

என்னிடம் சிறப்பான
தனித்திறமை என்று
எதுவுமே இல்லை

என்னிடம் இருப்பது
ஆர்வம் மட்டுமே!






”ஓமனில் சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள

# 18 மீனவர்களை இந்தியாவுக்கு கொண்டுவர வேண்டும்” – வைகோ கோரிக்கை

சென்னை : நவ. 26–

ஓமானில் சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள 18 மீனவர்களைஇந்தியாவிற்குக் கொண்டுவர மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வைகோ கோரிக்கை விடுத்துள்ளார்.

மதிமுக பொதுச்செயலாளர்வைகோ இதுகுறித்துவெளியிட்டிருக்கும் அறிக்கையில், “கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த பதினெட்டு மீனவர்கள், ஓமன் நாட்டைச் சேர்ந்த மசூரிடம் (தொடர்பு எண்: +96899330063) 2022ஆம் ஆண்டு ஏப்ரல் 15ஆம் முதல் பணிபுரிந்து வந்துள்ளனர். இந்த 18 மீனவர்களும் ஓமானில் உள்ள DUQM துறைமுகத்தில் மசூருக்குச் சொந்தமான NOOH –1012 மற்றும் YAHYA –1184 ஆகிய இயந்திர படகுகளில்



மீன்பிடி தொழில் செய்து வந்துள்ளனர்.

மசூர் உரிய சம்பள பணத்தை மீனவர்களுக்கு வழங்காமலும்,அவர்களைத் துன்புறுத்தியும்வந்துள்ளார். மேலும் மீனவர்களுக்கான சம்பள பாக்கியை மீனவர்களுடைய கேப்டன் பெத்தெலிஸ், மசூரிடம் கேட்டுள்ளார். அதன்பிறகு, நவம்பர் 15, 2023 அன்று, மசூரின் மேலாளர்தலைமையிலான குழுவினரால் பெத்தேலிஸ் அழைத்து செல்லப்பட்டு, சட்டவிரோதமாகமறைத்து வைக்கப்பட்டிருப்பதால் மற்ற மீனவர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

மேலும் பெத்தேலிஸ் எங்கே? என்று மீனவர்கள் கேட்டதற்கு, பெத்தேலிஸுக்கு என்ன ஆனதோ அது உங்களுக்கும் நடக்கும் என்று மசூர் மிரட்டியுள்ளார். இந்தச் சூழலில், இனி ஓமனில் பணிபுரிவது பாதுகாப்பு இல்லை என மீனவர்கள் கருதுகின்றனர். மீனவர்கள் தங்களை இந்தியாவுக்கு திருப்பி அனுப்புமாறு மசூரிடம் கேட்டுக் கொண்டனர். அவர்களை இந்தியாவுக்குத் திரும்ப அனுமதிப்பதற்குப்பதிலாக, மீனவர்களுக்கு தண்ணீரும் உணவும்இல்லாமல்பட்டினி போட்டு இருக்கிறார் மசூர். எனவே, பெத்தேலிஸ் சட்டவிரோதமாகமறைத்து வைக்கப்பட்டதிலிருந்து விடுவிக்கப்படவும், ஓமானில் சிக்கித் தவிக்கும் மீனவர்களைஇந்தியாவிற்குக் கொண்டுவரவும் மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்” எனத் தெரிவித்துள்ளார்.

# ‘சேரி’ தப்பான வார்த்தை கிடையாது அதனால் மன்னிப்பு கேட்க முடியாது – குஷ்பு

சென்னை : நவ. 26, “சேரி ஒன்றும் தப்பான வார்த்தை கிடையாது. அதனால் நான் யாரிடமும் மன்னிப்பு கேட்க வேண்டிய அவசியமில்லை. காங்கிரஸ்காரங்க எப்போ என் வீட்டின் முன்பு போராட்டம் நடத்துவார்கள் என நான் காத்திருக்கிறேன்” என்றுநடிகை குஷ்பு தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், “சேரி என்பது தவறான வார்த்தை கிடையாது. வேளச்சேரி, செம்மஞ்சேரி என்பது போலதான். அதற்கான விளக்கத்தையும் நான் தெளிவாக கொடுத்துள்ளேன். ‘சேரி’ என்ற வார்த்தை அரசு ஆவணங்களில் இருக்கிறது. வேளச்சேரி, செம்மஞ்சேரின்னு எல்லாம் இருக்கே, அதுக்கு என்ன அர்த்தம்?



இதற்கு மட்டும் போராட்டம் நடத்துவோம் என கூறும் காங்கிரஸ்காரங்க, ஒரு பெண்ணானஎன்னைஎவ்வளவு கீழ்த்தரமாக பேச முடியுமோ அவ்வளவு கீழ்த்தரமாக பேசும் திமுகவினரை கண்டித்து ஏன் போராட்டம் பண்ணல? நான் சந்திக்காத வழக்குகள் கிடையாது. விசாரணைக்கு அழைக்கட்டும் நிச்சயம் போவேன். நான் யாரையும் மரியாதைக் குறைவாக பேசவில்லை. எனக்கு தெரிந்த மொழியில் நான் பேசினேன்.

இந்தியாவின் குடியரசு தலைவராக திரௌபதி முர்மு பதவியேற்ற போது அதனைத் தாங்கிக் கொள்ள முடியாமல் விமர்சனம் செய்தவர்கள் தான் இந்த காங்கிரஸார். நேருவுக்கும், இந்திராகாந்திக்கும் பாரத் ரத்னா வாங்கி கொடுத்தவர்களுக்கு அம்பேத்கருக்கு ஏன் கொடுக்க முடியவில்லை.

த்ரிஷா, மன்சூர் அலிகான் விவகாரத்தில் எங்களுக்கு புகார் வந்தது. அதன்பேரில்நடவடிக்கை எடுத்தோம். அதேபோல ரோஜா விவகாரத்திலும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என புகார் வந்தது. அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது. மணிப்பூர் விவகாரத்தில்உங்கள்கைகளுக்கு வந்த பிறகுதான் எங்களுக்கே அந்த வீடியோ வந்தது. அதன்பின் நடவடிக்கை எடுத்தோம். என்ன நடவடிக்கை எடுத்தோம் என்பது போலீஸாருக்கு நன்கு தெரியும்” என்றார்.






# மசோதாக்கள் குறித்து ஆளுநர் எந்த முடிவும் எடுக்கவில்லை: சட்டத்துறை அமைச்சர் தகவல்

மதுரை : நவ. 26, பஞ்சாப் ஆளுநருக்கு எதிராக அம்மாநில அரசு தொடர்ந்த வழக்கில் உச்ச நீதிமன்றம் பல்வேறு உத்தரவுகளை பிறப்பித்துள்ள நிலையிலும், தமிழக ஆளுநர் எந்தவிதமான முடிவையும் எடுக்கவில்லை என தமிழக சட்டத்துறை அமைச்சர் ரகுபதி தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை ஆளுநர் கிடப்பில் போட்டுள்ளார். இதனால் அரசு நிர்வாகம் முடங்குகிறது என தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தை நாடியுள்ளது. இந்த நிலையில், பஞ்சாப் அரசு ஆளுநருக்கு எதிராக தொடர்ந்த வழக்கில் பல்வேறு அதிரடி உத்தரவுகளை பிறப்பித்தது. அதனைத் தொடர்ந்து அம்மாநில ஆளுநர் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளித்தார்.

இந்த நிலையில் நேற்று மதுரையில்செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் ரகுபதி, ‘‘10 மசோதாக்களை நாங்கள் ஆளுநருக்கு அனுப்பியுள்ளோம். அவர் அதுகுறித்து எந்தவிதமான முடிவும் எடுக்காமல் வைத்துள்ளார். இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் உள்ளது. நிச்சயம் நல்ல தீர்ப்பு வரும் என எதிர்பார்க்கிறோம்.

பஞ்சாப் வழக்கை மேற்கோள் காட்ட வேண்டுமா என்பதை வழக்கறிஞர்கள் முடிவு செய்வார்கள். எத்தனை மசோதாக்கள் நிலுவையில் உள்ளது என்ற புள்ளி விவரம் என்னிடம் இல்லை. தற்போது நாங்கள் 10 மசோதாக்களை இரண்டாவது முறையாக நிறைவேற்றி அனுப்பியுள்ளோம். நிச்சயமாக அதனை அவர் திருப்பி அனுப்ப வாய்ப்பே இல்லை என்று தான் நினைக்கிறேன்” என்றார்.



மதுரை மாவட்டம் உசிலம்பட்டி வட்டம் தும்மக்குண்டு கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல், உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியர் இரவிச்சந்திரன், உசிலம்பட்டி வட்டாட்சியர் சுரேஸ் பிரடிக் கிளமெண்ட், தும்மக்குண்டு ஊராட்சி மன்றத் தலைவர் பெருமாள் ஆகியோர் உடன் உள்ளனர்.

# 132 நுண்ணறிவு பிரிவு காவலர்கள் பணியிட மாற்றம் சென்னை காவல்துறை ஆணையர் அதிரடி

சென்னை, நவ. 26–

சென்னையில் 12 காவல் மாவட்டங்களில் 132 காவல் நிலையத்தில் பணியாற்றி வந்த நுண்ணறிவு பிரிவு காவலர்களை பணியிட மாற்றம் செய்து காவல்துறை ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர் உத்தரவிட்டுள்ளார்.

சென்னையில் போதை பொருள் புழக்கத்திற்கு எதிராக காவல்துறை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக குட்கா, பான்மசாலா உள்ளிட்ட போதை பொருள் புழக்கத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல் மெத்தனமாக செயல்பட்டது, போதைப்பொருள் விற்பனை செய்யும் நபர்களுடன் ஆதரவாக செயல்பட்டது உள்ளிட்ட காரணங்களுக்காக சென்னை வடக்கு மற்றும் மேற்கு மண்டலத்தில் பணியாற்றி வந்த 15



ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள் மற்றும் காவலர்கள் என 80க்கும் மேற்பட்ட காவலர்களை காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றம் செய்து சென்னை காவல்துறை ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர் உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இதன் அடுத்த கட்ட நடவடிக்கையாக சென்னையில் வண்ணாரப்பேட்டை, தி.நகர், அண்ணாநகர், கீழ்ப்பாக்கம், அடையாறு உட்பட 12 காவல் மாவட்டங்களில் உள்ள 132 காவல் நிலையங்களில் பணியாற்றி வந்த நுண்ணறிவு பிரிவு காவலர்களை பணியிட மாற்றம் செய்து காவல்துறை ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர் உத்தரவிட்டுள்ளார். குறிப்பாக 3 ஆண்டுகளுக்கு மேல் ஒரே காவல் நிலையத்தில் பணியாற்றி வந்த நுண்ணறிவு காவலர்களை அதே மாவட்டத்தில் உள்ள காவல் நிலையங்களுக்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அதுமட்டுமின்றி சென்னையில்உள்ளஅனைத்து காவல் மாவட்டங்களில் சட்ட ஒழுங்கு காவலர்கள் மற்றும் சமூக விரோத செயல்களில் ஈடுபடும் நபர்களுடன் சேர்ந்து அவர்களுக்கு ஆதரவாக செயல்பட்டு வசூல் வேட்டையில் ஈடுபட்டு வந்த நுண்ணறிவு காவலர்கள் பட்டியலை தயார் செய்து அவர்களை நுண்ணறிவு பிரிவில் இருந்து மாற்றம் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக காவல்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## காணவில்லை

புதுக்கோட்டை மாவட்டம், தாலுகா, டவுன், நம்பர் 3635 அசோக்நகர், முருகன் காலனியில் வசித்துவந்த பழனியப்பன் மகன் சரவணன் ஆகிய நான் கொடுக்கும் அறிவிப்பு: எனது தாயார் பானுவிற்கு சொந்தமான கிரைய பத்திரம் 28.04.1993 தேதியில் புதுக்கோட்டை சார் பதிவகத்தில் 735/1993 எண்ணாக பதிய பெற்ற கிரைய ஆவணத்தை கடந்த 10.05.2023 அன்று அசோக்நகரிலிருந்து புதுக்கோட்டை நகருக்கு வரும் வழியில் காணாமல் போய்விட்டது. இது தொடர்பாக காவல்துறையில் CAS23270811 புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட ஆவணத்தை யாரேனும் கண்டெடுத்தால் கீழ்கண்ட தொலைபேசி எண்ணிற்கு தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தொடர்புக்கு: சரவணன், செல்நம்பர்: 7373655159

# கே.எஸ்.அழகிரி கூட்டத்தில் குண்டு வெடிக்கும் பதிவு போட்ட காங்கிரஸ் நிர்வாகி கைது

நெல்லை : நவ. 26, நெல்லையில் தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைவர் கே.எஸ்.அழகிரி பங்கேற்கும் ஆலோசனை கூட்டத்தில் வெடிகுண்டு வெடிக்கும் என வாட்ஸ்அப்பில் பதிவிட்ட காங்கிரஸ் நிர்வாகியை போலீஸார் கைது செய்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நெல்லை மாவட்டம், திசையன்விளையில் நெல்லை நாடாளுமன்ற தொகுதி காங்கிரஸ் வாக்குச்சாவடி முகவர்கள் பயிற்சி பாசறை மாநாடு நேற்று நடைபெற்றது. இதில் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கே.எஸ். அழகிரி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.



இந்நிலையில் மூன்றடைப்பு பகுதிக்கு அருகே அ.சாத்தான்குளம் கிராமத்தைச் சார்ந்த நாங்குநேரி வடக்கு வட்டார காங்கிரஸ் தலைவர் அன்புரோஸ் என்பவர் திசையன்விளை கூட்டத்திற்கு கே.எஸ். அழகிரி வரும்பொழுது வெடிகுண்டு வெடிக்கும் என்று தனது வாட்ஸ் அப் குரூப்பில் பதிவிட்டுள்ளார். இதனைத்தொடர்ந்து நாங்குநேரி வட்டார காங்கிரஸ் தலைவர் முத்துகிருஷ்ணன் என்பவர் மூன்றடைப்பு பகுதி போலீஸாரிடம் புகார் அளித்தார்.

அதன்பேரில் அன்பு ரோஸ் மீது மூன்றடைப்பு போலீஸார் வழக்கு பதிவு செய்து, அவரை கைது செய்து விசாரணை நடத்திய நிலையில், அன்பு ரோஸ், ரூபி மனோகரன் ஆதரவாளர் என்பதால் கே.எஸ்.அழகிரி கலந்துகொண்ட கூட்டத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்ததாக போலீஸார் தெரிவித்தனர். காங்கிரஸ் தலைவருக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்த விவகாரம் அப்பகுதி மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# கும்பகோணத்தில் அதிர்ச்சி சம்பவம் : உடலுறுப்புகளை மசாலா தடவி சாப்பிட்ட கும்பகோணம் சித்த மருத்துவர்

கும்பகோணம் : நவ. 26, கும்பகோணம் அருகே போலி சித்த மருத்துவர் கேசவமூர்த்தி வீட்டில் தோண்ட தோண்ட எலும்புகள் கிடைத்ததால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் அதிர்ச்சியில் உறைந்து போயிருக்கிறார்கள் தஞ்சை போலீசார்.

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தாலுகா சோழபுரம் கீழத்தெருவில் வசிப்பவர் கேசவமூர்த்தி (47). கும்பகோணம் அருகே சோழபுரம் மணல்மேடு கிராமத்தை சேர்ந்த 27 வயது அசோக்ராஜனை,கேசவமூர்த்தி கொலை செய்துவிட்டார். முறைப்படி வைத்தியம் படிக்காத இவர், அரைகுறை வைத்தியத்தை வைத்தே 50–க்கும்மேற்பட்டோருக்கு சுன்னத் செய்திருக்கிறார். அப்படித்தான் அசோக் ராஜனுக்கும் சுன்னத் செய்துள்ளார். ஆனால்,சிகிச்சை தவறாகிவிட்டது. இதனால், அசோக்குக்கு அடிக்கடி உடம்பு சரியில்லாமல் போகவும், கேசவமூர்த்தியிடம் இதை பற்றி கேட்டுள்ளார். அப்போதுதான் விவகாரம் துவங்கியிருக்கிறது. இதுபோக, கேசவமூர்த்திக்கு "ஓரினச்சேர்க்கை"உறவுபழக்கம் இருந்திருக்கிறது. தன்னிடம் சிகிச்சைக்கு வந்த அசோக் ராஜனிடமும் ஓரின சேர்க்கை உறவுக்கு கட்டாயப்படுத்தி உள்ளார். ஆனால், அசோக் இதற்கு மறுத்துள்ளார். இந்த ஆத்திரத்தில் நீண்ட நேரம் பாலியல் உறவுகொள்ள வீரியம் மிக்க மருந்து என சொல்லி மருந்து ஒன்றை கொடுத்து அசோக்கை கொன்றுள்ளார்.

அதற்கு பிறகு, அசோக்கை துண்டு துண்டாக வெட்டி வீட்டின் பின்பக்கம் குழிதோண்டி புதைத்துவிட்டார் கேசவமூர்த்தி. இவ்வளவும் போலீஸ் விசாரணையில் தெரியவந்ததையடுத்து, அவரது வீட்டின் பின்பக்கம் போலீசார் தோண்டி பார்த்தபோது, அசோக்கின் உடல் உறுப்புகளை காணவில்லை. இதனால் பதறிப்போன போலீசார், கேசவமூர்த்தி வீட்டுக்குள் சென்று ஆய்வு செய்துள்ளனர். அப்போது, ஒரு பெட்டியில் சில எலும்புகள் இருந்துள்ளன.. இதனால், மேலும் அதிர்ச்சி அடைந்த போலீசார், கேசவமூர்த்தியின் வீட்டை சுற்றி தோண்ட ஆரம்பித்தனர்.

அப்போது, ஏராளமான



எலும்புகள் கிடப்பதை கண்டு உறைந்து போனார்கள். அசோக் போலவே, மேலும் பலர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று சந்தேகப்பட்ட போலீசார், கேசவமூர்த்தி வீட்டில் பொக்லைன் இயந்திரம் மூலம் பள்ளம் தோண்டி ஆய்வு செய்தார்கள். முதலில் ஒரு மண்டை ஓடு கிடைத்தது. அந்த மண்டை ஓடு, சோழபுரத்தில் கடந்தவருடம்காணாமல்போன அனஸ் என்பவரது என்பது உறுதியானது.

இதையடுத்து, கடந்த 2 நாட்களாகவே, தஞ்சை மாவட்ட எஸ்பி முன்னிலையில் ஆய்வுகள் நடத்தப்பட்டன. சித்த வைத்தியரின் வீட்டின் பின்புறம் முழுக்கவும் தோண்டியெடுக்க உத்தரவிடப்பட்டு, அந்த வேலையும் நடந்து வருகிறது. போலிடாக்டர் கேசவமூர்த்திக்கு திருமணமாகி, 2 மனைவிகள் இருக்கிறார்கள். 2 பேருமே அவருடன் வாழாமல் பிரிந்து போய்விட்டார்களாம். கேசவமூர்த்தி எப்போதுமே, இளைஞர்களுடன்நெருக்கமாகப் பழகி, அவர்களுடன் உறவு கொள்வாராம். இவர் உறவு கொண்ட பல இளைஞர்களை காணவில்லையாம்.

விசாரணையில், கொலை செய்த அசோக்கின் உடல் உறுப்புகளை கேசவ மூர்த்தி சாப்பிட்டது தெரியவந்துள்ளது. அசோக்கின் உடலை துண்டு துண்டாக வெட்டி, நுரையீரல், கல்லீரல் ஆகியவற்றை வீட்டிலேயே மசாலா சேர்த்து சமைத்து சாப்பிட்டிருக்கிறார். கடந்தவருடம்மாயமான ஆட்டோ டிரைவர் முகமது அனஸ் என்ற 26 வயது இளைஞரையும், இப்படித்தான் கொன்று, அவரது உடல் பாகங்களையும் துண்டு துண்டாக வெட்டி கிச்சனுக்கு கொண்டு சென்று மசாலா தடவி சமைத்து சாப்பிட்டாராம். இப்படி மேலும் பலரை கொலை செய்துகொன்றிருக்கலாம் என்ற சந்தேகம் வலுத்துள்ளது.

பொக்லைன் இயந்திரம் வரவழைக்கப்பட்டுகேசவமூர்த்தியின் வீட்டின் முன்பகுதி மற்றும் கொல்லைபுறத்தில் இருந்த மூலிகைச்செடி உள்ளிட்ட வாழை மரங்கள் அனைத்தையும் போலீசார் அகற்றினர். 3 அடிக்கு மட்டும் பள்ளம் தோண்டி பார்த்தபோது 30க்கும் மேற்பட்ட துண்டுகளாகவிரல் அளவிலான எலும்புகள் கிடைத்திருக்கிறது. இதில் சேகரிக்கப்பட்டவை எல்லாம் முகமது அனஸ் உடல் பாகங்களா? அல்லது வேறு இளைஞர்களின் எலும்புகளா? என்று அறிய ஆய்வகத்திற்கு போலீசார் அனுப்பி வைத்திருக்கிறார்கள். இதைத்தவிர, கேசவமூர்த்தி வீட்டில் இருந்த ஏகப்பட்ட மருந்து மாத்திரைகள், மூலிகை பொடிகள் கிடைத்திருக்கிறது. அதுமட்டுமல்ல, பெண்கள் பயன்படுத்தும் நகைகள் மற்றும் பயன்படுத்தாத பொருட்கள் கிடைத்திருக்கின்றன. இதைத்தவிர, பெண்களின் நைட்டி,டிரஸ்கள்போன்றவையும், கேசவமூர்த்தியின் வீட்டில் கிடைத்திருக்கிறது. அனைத்தையும் 10க்கும் மேற்பட்ட பெட்டிகளில் போட்டு, போலீசார் எடுத்து சென்றிருக்கிறார்கள். இதெல்லாம் யாருடையது என்று தெரியவில்லை. ஆனால், நாளுக்கு நாள் கும்பகோணம் சம்பவம் தமிழகத்துக்கே அதிர்ச்சியை தந்து கொண்டிருக்கிறது.

மதுரை வைகை ஆற்றில் வெள்ளப்பெருக்கு

# ‘ஸ்மார்ட் சிட்டி’ சாலை நீரில் மூழ்கியதால் போக்குவரத்து பாதிப்பு

மதுரை : நவ. 26, தொடர் மழையால் வைகை அணை முழுக் கொள்ளளவை எட்டிய நிலையில், அணையில் இருந்து 4 ஆயிரம் கன அடி நீர் திறக்கப்பட்டுள்ளதால், மதுரை வைகை ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

வடகிழக்குபருவமழையால் வைகை அணைக்கு நீர்வரத்து அதிகரித்து முழுக் கொள்ளளவை எட்டியுள்ளது. இதையடுத்து, அணையில் இருந்து ராமநாதபுரம், சிவகங்கை, மதுரை மாவட்டத்துக்கு ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இந்த தண்ணீர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மதுரை வைகை ஆற்றை வந்தடைந்தது. நீண்ட நாட்களுக்கு பிறகு வைகை ஆற்றில் ஆர்ப்பரிக்கும் வெள்ளம் இரு கரைகளையும் தொட்டபடி கரைபுரண்டு ஓடியது.

இதில், யானைக்கல் தரைப்பாலம் தண்ணீரில் மூழ்கியது. இந்த தரைப்பாலத்துக்கு அருகே



தடுப்பணை உள்ளது. இந்த தடுப்பணை பகுதியில் ஆகாய தாமரைச் செடிகள் அதிகமாக இருந்ததால் தடுப்பணையை தாண்டி, தண்ணீர் கடந்து செல்ல முடியவில்லை. அதனால், வைகை ஆற்று தண்ணீர் ஆழ்வார்புரம் ஸ்மார்ட் சிட்டி வைகை கரை சாலையை மூழ்கடித்து போக்கு வரத்து பாதிக்கப்பட்டது. இந்தச் சாலை வழியாக அதிக அளவில் வாகனங்கள் சென்று வருகின்றன. செல்லூர், பாத்திமா கல்லூரி, கூடல் நகர், திண்டுக்கல் உள்ளிட்ட பகுதிகளுக்கு கோரிப்பாளையம் பகுதியில் இருந்து வாகனங்கள் செல்கின்றன. ஆனால், இந்த சாலையில் அதிக அளவு தண்ணீர் சென்றதால் போக்குவரத்து பாதித்தது. அதையும் மீறி சிலர் கார்கள், இரு சக்கர வாகனங்களில் கடக்க முயன்றபோது அவை பழுதடைந்து நின்றன.

பின்னர் மீட்பு வாகனங்களை வரவழைத்து வாகனங்களை மீட்டனர். இதையடுத்து போலீஸார் வாகனஓட்டுநர்களைஎச்சரித்து மேம்பாலம் வழியாகச் செல்ல அறிவுறுத்தினர். தடுப்பணை பகுதி ஆற்றில் ஆகாய தாமரைச் செடிகளை பொதுப்பணித் துறை அதிகாரிகள் முறையாக அகற்றாததே, இதற்கு முக்கியக் காரணம். இதையடுத்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அவசர அவசரமாக இயந்திரங்கள் மூலம் ஆகாய தாமரை செடிகளை அகற்றினர். நீண்ட நாட்களுக்கு பின்பு வைகையில் தண்ணீர் கரைபுரண்டு ஓடும் கண்கொள்ளா காட்சியை பொதுமக்கள் மேம்பாலத்தின் மீது நின்றபடி பார்வையிட்டனர். போலீஸார், கரையோரங்களில் நின்றபடி ஆற்றில் மக்கள் யாரும் இறங்காதவாறு கண்காணிக்கின்றனர்.

### சென்னை கொருக்குப்பேட்டையில் 10 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள

# விளையாட்டு வளாகத்தை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார்



சென்னை, நவ.26–

சென்னை கொருக்குப்பேட்டை சுண்ணாம்புகால்வாய்பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் 10 கோடி மதிப்பீட்டில் பல்வகை விளையாட்டுகளை உள்ளடங்கிய விளையாட்டு வளாகம் அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

ஆர் கே நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜேஜே எபினேசர் தலைமையில் நடைப்பெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். பத்து கோடி மதிப்பில் 4 ஏக்கர் பரப்பளவில் கிரிக்கெட் பயிற்சி, கபடி,குத்துச் சண்டை,பெண்கள் உடற்பயிற்சி கூடம்,இறகு பந்து. திறந்தவெளி, உடற்பயிற்சி கூடம், கூடைப்பந்து, குழந்தைகள் விளையாட்டு திடல், ஸ்கேட்டிங் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் அடங்கிய விளையாட்டு மையம் வடசென்னை மக்கள் பயன்பாட்டிற்கு ஒரு வருடத்தில் வரும் என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார். மேலும் கூறுகையில் வடசென்னை பொருத்தவரை விளையாட்டு வீரர்கள் அதிக அளவில் உள்ளார்கள் அவர்களை ஊக்கப்படுத்தி அவருடைய திறமைகளை வெளியே கொண்டு வருவதற்காகவே இந்த விளையாட்டு வளாகம் அமைக்கப்படுகிறது. இதனை வடசென்னை மக்கள் பயன்படுத்தி அதிக அளவு விளையாட்டு வீரர்களை கொண்டு வர வேண்டும் என்று தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் அமைச்சர்கள். ராஜா கண்ணப்பன். பி கே சேகர்பாபு.செஞ்சி மஸ்தான். சென்னை மாநகர மேயர் பிரியா. துணை மேயர் மகேஷ் குமார். வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி. சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.ஜே.எபினேசர். ஆர். டி.சேகர். ஐட்ரீம் மூர்த்தி. மாவட்ட செயலாளர் இளைய அருணா. மண்டல குழு தலைவர் நேதாஜி கணேசன். பகுதி செயலாளர் ஜெ.தாஸ்பாண்டியன்.லட்சுமணன். வழக்கறிஞர்மருதுகணேஷ். பொன்இளவரசன், மதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

# சென்னை ராயபுரத்தில் தற்போது பெய்த மழை நீரில் ஊறிய பாழடைந்த கட்டிடம் இடிந்து விழுந்தது



ராயபுரம்,நவ,26

சென்னை ராயபுரம் ஆஞ்சநேயா நகர் ஆறாவது தெருவில் வசிப்பவர் நாகேந்திர தேவிக்கு இவருக்கு சொந்தமான கட்டிடம் உள்ளது. இந்த கட்டிடம் சுமார் 50 வருடங்களுக்கு மேலாக இருந்துள்ளது இதனால் வருகின்ற டிசம்பர் மாதம் இடித்துவிட்டு புதிய கட்டிடம் கட்டுவதற்காக காத்திருந்த நிலையில் தற்பொழுது பெய்த மழையில் அந்த கட்டிடம் முழுவதும் மழை நீரில் ஊறி நிலையில் இருந்த அந்த கட்டிடம் இடிந்து விழுந்து உள்ளது.

அருகில் இருந்த இளம் பெண் ஒருவருக்கு லேசான காயங்கள் ஏற்பட்டு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது ராயபுரம் தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவித்த பேரில் இந்த கட்டிடத்தை முழுவதும் இடித்துள்ளனர்.

தகவலறிந்து விரைந்து வந்து ராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் மூர்த்தி நேரில் சென்று பார்வையிட்டு காயமடைந்த பெண்ணுக்கு மருத்துவ செலவுக்கு நிதி உதவி வழங்கினார்.

அக்கம் பக்கத்தினர் யாரும் இல்லாததால் யாருக்கும் எந்த ஒரு அசம்பாவிதங்கள் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ், வட்ட செயலாளர் புகழேந்தி, கட்சி நிர்வாகிகள் மற்றும் மாநகராட்சி பணியாளர்கள் இருந்தனர்.

# திமுக இளைஞரணி பைக் பேரணிக்கு சிறப்பான வரவேற்பு



காட்டுமன்னார் கோயில் நவ.26:

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோயில் பகுதிக்கு வியாழக்கிழமை வந்த திமுக இளைஞரணி 2-ஆவது மாநில மாநாடு பைக் பேரணிக்கு சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது.

டிசம்பர் 17-ஆம் தேதி திமுக இளைஞரணி சார்பில், 2-ஆவது மாநில மாநாடு சேலத்தில் நடைபெறவுள்ளது. இந்த மாநாடு தொடர்பான விழிப்புணர்வுபைக் பேரணியை கடந்த 15-ஆம் தேதி கன்னியாகுமரியில் அமைச்சர் உதயநிதி தொடங்கிவைத்தார். தமிழகம் முழுவதும் செல்லும் இந்தப்பேரணி வியாழக்கிழமை கடலூர் மாவட்டத்துக்கு வந்தது.

காட்டுமன்னார்கோவில் பகுதிக்கு ஒருங்கிணைப்புக் குழுவைச் சேர்ந்த முத்துக்குமரன் தலைமையில் பைக் பேரணியில் வந்த இளைஞர் அணியினரை கடலூர் கிழக்கு மாவட்டப் பொருளாளரும், எம். ஆர்.கே.கல்விக் குழுமத் தலைவருமான எம்.ஆர்.கே.பி. கதிரவன் தலைமையில், கட்சி நிர்வாகிகள் வாகனங்களுக்கும் மாலை அணிவித்து இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு பொன்னாடை போர்த்தி வரவேற்றனர்.

நிகழ்ச்சியில் ஒன்றியச் செயலர்கள் முத்துசாமி, ராமலிங்கம் சோழன்கோவிந்தசாமி, மாநிலப் பொதுக்குழு உறுப்பினர் பாலமுருகன், கருணாநிதி அவைத்தலைவர் கருணாநிதி நகரச் செயலர்கள் கணேச மூர்த்தி, நகர துணை செயலாளர் சுப்ரமணியன் பேரூராட்சி மன்ற துணைச் தலைவர் மகேஸ்வரி மணிமாறன் அன்வர் சதாத், மாவட்ட திமுக இளைஞரணி அமைப்பாளர் பொறியாளர் கார்த்திகேயன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சென்னையில் அமெரிக்க இளைஞர்கள் அட்டகாசம் மதுபோதையில் நடுரோட்டில் துரத்தித் துரத்தி தாக்கி ரகளை



சென்னை : நவ 26-

சென்னையில் காவலர்கள், பொதுமக்கள் என அனைவரையும் மதுபோதையில் நடுரோட்டில் அமெரிக்க இளைஞர்கள் துரத்தி துரத்தி தாக்கிய வீடியோ வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சென்னை நுங்கம்பாக்கம் பகுதியில் உள்ள பிரபல நட்சத்திர ஓட்டலில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இரண்டு அமெரிக்க இளைஞர்கள் மது அருந்தியுள்ளனர். அப்போது போதை தலைக்கேறி இருவரும் ஓட்டலில் மது அருந்திக் கொண்டிருந்தவர்களிடம் தகராறில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. இதனால் ஓட்டல் நிர்வாகம் இரண்டு இளைஞர்களையும் பவுன்சர்கள் உதவியுடன் ஆட்டோவில் ஏற்றி அனுப்பி வைத்துள்ளனர். பின்னர் ஆட்டோவில் வந்த அமெரிக்க இளைஞர்களில் ஒருவர் திடீரென ஜெமினி சிக்னலில் ஆட்டோவில் இருந்து வெளியே குதித்து சாலையில் நடந்து சென்றவர்கள், வாகனத்தில் சென்றவர்கள் என அனைவரையும் கண்மூடித்தனமாக தாக்கியுள்ளார்.

இதில் கோபமடைந்த பொதுமக்கள் சிலர் பதிலுக்கு அந்த அமெரிக்க இளைஞரை அடித்து சாலையோரம் உட்கார வைத்து பின்னர் காவல் கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தெரிவித்தனர். தகவலின் பேரில் அங்கு வந்த காவல்துறையினர் காயமடைந்த அமெரிக்க இளைஞரை மீட்டு சிகிச்சைக்காக 108 ஆம்புலன்ஸில் ஏற்ற முற்பட்டபோது மதுபோதையில் இருந்த அந்த இளைஞர் வெறிபிடித்தது போல் கூச்சலிட்டு மீண்டும் அங்கிருந்த காவல் ஆய்வாளர், காவலர்கள், பொதுமக்கள், என அனைவரையும் துரத்தி துரத்தி தாக்கினார். இதனைப் பார்த்த அவ்வழியாக சென்ற இளைஞர்கள் சிலர் காவலர்களின் உதவியோடு அந்த இளைஞரை மடக்கி பிடித்து கைகளை கட்டி போலீஸ் வாகனத்தில் ஏற்றி ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இது தொடர்பாக ஆயிரம் விளக்கு போலீஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். முதற்கட்ட விசாரணையில் மது போதையில் ரகளையில் ஈடுபட்ட இளைஞர்கள் அமெரிக்கா கலிஃபோர்னியா மாகாணத்தை சேர்ந்த அலெக்ஸ் மற்றும் மெல்கார் என்பது தெரியவந்தது. மேலும் இவர்கள் இருவரும் நுங்கம்பாக்கத்தில் உள்ள பிரபல நட்சத்திர ஓட்டலில் நடைபெற்ற பார்ட்டியில் கலந்து கொண்டு அளவுக்கு அதிகமான மது அருந்தியதும், பின்னர் போதை தலைக்கேறி இவ்வாறு நடந்து கொண்டதும் தெரியவந்தது. அமெரிக்க இளைஞர் மதுபோதையில் நடுரோட்டில் ரகளையில் ஈடுபட்ட வீடியோ தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



சென்னை இராயபுரம் தொகுதி, 52வது வட்டம், இராமன் தெருவில் உள்ள தர்காவில் சந்தனக்கூடு விழாவை முன்னிட்டு, அதிமுக அமைப்பு செயலாளர் இராயபுரம் ஆர். மனோ, சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார்.அவருக்கு நிர்வாகிகள் சால்வை அணிவித்து மரியாதை செய்தனர்.



மதுரையில் பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை நேற்று நிருபர்களிடம் கூறியதாவது: தி.மு.க. ஆட்சியில் ஆவின் நிறுவனத்தில் பல்வேறு முறைகேடுகள் நடந்துள்ளன. ஆவின் பாலில் கொழுப்பு சத்துக்களை குறைத்துள்ளனர், பால் உற்பத்தியாளர்களிடம் ஆவின் பால் கொள்முதல் செய்யும் பொழுது ஏதேனும் குறைகள் இருந்தால் பாலை நிராகரித்து வருகின்றனர், தனியார் பால் நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில் நிறுவனம் செயல்பட்டு வருகிறது. தமிழக அரசு ஆயிரம் கோவில்களுக்கு கும்பாபிஷேகம் நடத்தி உள்ளதாக கூறி வருகிறது, அதற்கு முதலமைச்சரின் பங்களிப்பு என்ன? பக்தர்களின் பணத்தை வைத்து கும்பாபிஷேகம் நடத்தப்பட்டு வருகிறது. திருடு போன சிலைகளை மீட்க தி.மு.க. நடவடிக்கை எடுக்கவில்லை. இளைஞர்கள் நம் நாட்டில் கிரிக்கெட்டை உயர்ந்த விளையாட்டாக கருத வேண்டும் இவ்வாறு அவர் கூறினார்.



புதுவை அரசு காரைக்கால் மாவட்டத்தில் கடந்த மாதம் அக்டோபர் 27–ஆம் தேதி முதல் டிசம்பர் 9–ஆம் தேதி வரை சுருக்கு முறை திருத்தப்பணி நடைபெற்று வரும் நிலையில் 04.11.2023 மற்றும் 5 11 2023 ஆகிய தேதிகள் சிறப்பு முகாம் நடைபெற்ற நிலையில் இரண்டாம் கட்ட சிறப்பு திருத்தப்பணி நேற்று 25.தேதி இன்று 26.தேதி ஆகிய இரு தினங்கள் நடைபெறுகின்றன. இம்முகாமில் புதிய 18 வயது நிரம்பிய அனைவரும் புதிய வாக்காளர்களாக பதிவு செய்து கொள்வதற்கும் பெயர் மாற்றம் பிழை திருத்தம் போன்ற பணிகள் நடைபெற்று வரும் நிலையில் வாக்காளர் பதிவு அதிகாரியும் (ERO X) துணை மாவட்ட ஆட்சியருமான ஜான்சன் காரைக்காலில் அமைந்துள்ள பல்வேறு வாக்குச் சாவடிகளில் நடைபெறும் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். மேலும் வாக்குச்சாவடிகளில் வரும் பொது மக்களிடம் தாங்கள் வாக்குச்சாவடிகளில் புதிய வாக்காளராக பதிவு செய்வதின் அவசியம் குறித்து துண்டு பிரசுரத்தை வழங்கினார். மேலும் அங்கு பணியில் இருக்கும் பி எல்.ஒ க்களிடம் இளம் வாக்காளர்கள் உட்பட வாக்கு சாவடிக்கு வரும் அனைவரையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்க விரைந்து நடவடிக்கை எடுக்கும் படியும் துணை ஆட்சியர் கேட்டுக் கொண்டார் இந்நிகழ்வில் துணை வாக்காளர் பதிவு அதிகாரி மதன்குமார் மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

### பள்ளி மாணவர்களுக்கு

# புதுக்கோட்டை மாவட்ட அளவிலான டேக்வாண்டோ போட்டி



புதுக்கோட்டை, நவ. 26

புதுக்கோட்டை முதன்மைக்கல்வி அலுவலக தேர்வுக்கூட அரங்கில் அனைத்து வகைப்பள்ளிகளின் மாணவர்களுக்கும் மாவட்ட அளவிலான டேக்வாண்டோ விளையாட்டுப்போட்டி முதல் நாள் மாணவிகளுக்கும், இரண்டாம் நாள் மாணவர்களுக்கும் 14,17,19 வயதிற்கேற்ப 3 பிரிவுகளாக பிரித்து 2 நாட்கள் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் மா.மஞ்சுளா வழிகாட்டுதல்படி நடைபெற்றது.

போட்டியினை மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் ஆர்.தங்கராஜ் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் மாவட்டச்சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் சாலை செந்தில், பள்ளித்துணை ஆய்வாளர்கள் கி.வேலுச்சாமி, குரு.மாரிமுத்து, ஆகியோர் வாழ்த்தி பேசினார்கள். அதனைத்தொடர்ந்து வெற்றி பெற்ற மாணவர்களுக்கு முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவர்களுக்கு பதக்கம் மற்றும் பாராட்டுச்சான்றிதழ் வழங்கப்பட்டது.

முதல் இடத்தைப்பிடித்த மாணவர்கள் மாநில அளவிலான போட்டிக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள். போட்டியினை புதிய விளையாட்டுப்போட்டிக்கான மாவட்ட இணைச்செயலாளரும், காவேரிநகர் அரசு மேல்நிலைப்பள்ளியின் உடற்கல்வி ஆசிரியருமான காசி. ராஜேந்திரன் ஒருங்கிணைப்பு செய்தார். இந்த நிகழ்ச்சியில் புதுக்கோட்டை டேக்வாண்டோ சங்கத்தின் மாவட்டச்செயலாளர் பாலசுப்பிரமணியன், நாகப்பட்டினம் டேக்வாண்டோ சங்கத்தின் மாவட்டச்செயலாளர் தர்மா, உடற்கல்வி இயக்குநர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் முதல் நாள் நடைபெற்ற போட்டியில் 350 மாணவிகளும், இரண்டாம் நாள் நடைபெற்ற போட்டியில் 450 மாணவர்களும் கலந்துகொண்டனர்.

### கும்மிடிப்பூண்டி கி.வேணு குடும்பத்தினருக்கு

# திமுக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை ஆறுதல் கூறினார்





ஊத்துக்கோட்டை, நவ26–

திமுக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினரும், முன்னாள் மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கும்மிடிப்பூண்டி கி.வேணு உடல் நலக்குறைவால் கடந்த மாதம் காலமானார்.

இந்நிலையில், கும்மிடிப்பூண்டி ஒன்றியம், பன்பாக்கம் கிராமத்தில் உள்ள அவரது இல்லத்துக்கு திமுக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை,நாடாளுமன்ற உறுப்பினர் ஆஸ்டின் ஆகியோர் வந்து கும்மிடிப்பூண்டி கி.வேணுவின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். பின்னர், கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றிய திமுக செயலாளரும், கும்மிடிப்பூண்டி கி.வேணுவின் மகனுமான கி.வே.ஆனந்தகுமார் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினர்.

இதன் பின்னர், திமுக தகவல் தொழில் அணி மாநில துணைச் செயலாளரும், முன்னாள் எம்எல்ஏ–வுமான சி.எச்.சேகர் அவர்களின் தாயார் கிருஷ்ணவேணி அண்மையில் காலமானார். எனவே, கும்மிடிப்பூண்டி மாபொசி நகரில் உள்ள சி.எச். சேகர் இல்லத்துக்குச் சென்றனர். அங்கு அவரது தாயாரின் திருவுருவப்படத்திற்கு திமுக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை,நாடாளுமன்ற உறுப்பினர் ஆஸ்டின் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இந்நிகழ்ச்சியில், திருவள்ளூர்கிழக்குமாவட்டகழக செயலாளரும்,கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன், கும்மிடிப்பூண்டிகிழக்கு ஒன்றிய செயலாளர் பரிமளம்,மாவட்ட கவுன்சிலர் மெதிப்பாளையம் ராமஜெயம், ஒன்றிய துணைச் செயலாளர்கள் திருமலை, காளத்தி,திருஞானம்,ஒன்றிய குழு உறுப்பினர்கள் ஜோதி,ஹரி,அமலா சரவணன், ஜெயச்சந்திரன்,மாவட்ட பிரதிநிதிபுலியூர்புருஷோத்தமன், தொண்டரணி அமைப்பாளர் முத்துக்குமார், பிரசாத், கும்மிடிப்பூண்டி கருணா, பைபாஸ் இஸ்மாயில், மாதர்பாக்கம் மனோகரன், ஊராட்சி மன்ற தலைவர்கள் நமச்சிவாயம்,வெங்கடேசன், பிரபு,வள்ளியம்மாள்பழனி, பெத்திக்குப்பம் குமார், சரவணன்,பூவலை தினகரன், அறிவழகன், நரேந்திரன் உள்ளிட்ட மாவட்ட,ஒன்றிய, பேரூர், கிளைக்கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள்,உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமான கலந்து கொண்டனர்.

# சென்னை புதுவண்ணாரப்பேட்டையில் பர்தா அணிந்து வந்து நகை கடையில் தங்க கம்மலை திருடிச் சென்ற பெண் கைது



சென்னை.நவ,26

சென்னை புதுவண்ணாரப்பேட்டை கிராஸ் ரோடு திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் மதன் ஜூவல்லரி என்ற நகை கடை உள்ளது கடந்த 18ம் தேதி பர்தா அணிந்து கொண்டு பெண் ஒருவர் நகைகளை பார்த்து விட்டு பிறகு வருகிறேன் என்று கூறிவிட்டு இருசக்கர வாகனத்தில் சென்றுள்ளார்.

பிறகு சிறிது நேரத்தில் 10 கிராம் எடையுள்ள தங்க கம்பல் எண்ணிக்கை குறைவாக இருந்ததை பார்த்தநகை கடை உரிமையாளர் சந்திப் உடனடியாக புதுவண்ணாரப்பேட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்தார் புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்தனர் இதனையடுத்து திருவொற்றியூர் உதவி ஆணையர் முகமது நாசர் உத்தரவின் பேரில் தனிப்படை அமைக்கப்பட்டது கடையில் பொருத்தப்பட்டு இருந்த சிசிடிவி கேமிரா காட்சிகளை தனிப்படை போலீசார் கைப்பற்றி விசாரணை தொடங்கினர்.

நகை கடையில் திருடும் பெண்களின் புகைப்படத்தை ஒப்பிட்டு செய்து விசாரணை செய்த போது போரூர் ராமாபுரம் மூகாம்பிகை நகர் பகுதியைச் சேர்ந்த 33 வயது உடைய பிரியங்கா என தெரியவந்தது இவர் ஏற்கனவே கூடுவாஞ்சேரி பகுதியில் நகை திருட்டில் ஈடுபட்டு சிறைக்குச் சென்றதும் தெரியவந்தது.

இதனை அடுத்து கூடுவாஞ்சேரி பகுதியில் பிரியங்கா சுற்றி வருவதாக தனி படை போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது தகவலின் பெயரில் புது வண்ணாரப்பேட்டை காவல் ஆய்வாளர் சுரேஷ் தலைமையில் தடைப்படை போலீசார் விரைந்து சென்றனர் கூடுவாஞ்சேரி பேருந்து நிலையம் அருகே பிரியங்கா நின்று கொண்டிருப்பதை பார்த்த தனிப்படை போலீசார் கைது செய்தனர் அடகு கடையில் வைக்கப்பட்டிருந்த தங்க கம்மலை போலீசார் மீட்டு பின்னர் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை மேற்கொண்ட போது தஞ்சாவூரில் நர்சிங் டிப்ளமோ படித்ததாகவும் சம்பளம் குறைவாக கிடைப்பதால் நகை திருட்டில் ஈடுபடுவதாகவும் தெரிவித்தார் இவர் மீது தாம்பரம், கல்பாக்கம் அச்சரப்பாக்கம் கூடுவாஞ்சேரி புது வண்ணாரப்பேட்டை உள்ளிட்ட காவல் நிலையங்களில் திருட்டு வழக்குகள் இருப்பது தெரியவந்தது இதனை அடுத்து பிரியங்கா மீது போலீசார் வழக்கு பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்



வேலூர் பேபி மஹாலில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவில் பகுத்தறிவு சீர்திருத்த செம்மல் – கலைஞர் சிறப்பு மலரை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் சு.முத்துசாமி, அர.சக்கரபாணி, அமைச்சர் ஆர்.காந்தி, நீர்வளத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தீப் சக்சேனா, கூடுதல் செயலாளர் மலர்விழி, மாவட்ட ஆட்சித் தலைவர் பெ.குமாரவேல் பாண்டியன். பாராளுமன்ற உறுப்பினர் து.மு.கதிர் ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.பி. நந்தகுமார். திரு.ப.கார்த்திகேயன். அமுலு விஜயன், அ.செ. வில்வநாதன், ஜே. எல். ஈஸ்வரப்பன், வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார். மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் பாபு, மாநகராட்சி துணை மேயர் சுனில் குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தென்காசியில் சமூக நலத்துறை சார்பில் விழிப்புணர்வு பேரணி



தென்காசி, நவ.26–

தென்காசி மாவட்ட சமூக நலத்துறை சார்பில் சர்வதேச பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு தினம், மற்றும் வரதட்சணை தடுப்பு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து புதிய பேருந்து நிலையம் வரை நடைபெற்றது.

தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் துரை ரவிச்சந்திரன் கொடி அசைத்து விழிப்புணர்வு பேரணியை தொடங்கி வைத்தார், இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் பத்மாவதி, மாவட்ட சமூக நல அலுவலர் மதிவதனா, உதவி மக்கள் தொடர்பு அலுவலர் ராமசுப்பிரமணியன், ஆகியோர் கலந்து கொண்டனர். அனைவராலும் பாலின வன்முறை தவிர்த்தலுக்கான உறுதிமொழி ஏற்கப்பட்டது, இந்த பேரணியில் வரதட்சணையை ஒழிப்போம், பாலின வன்முறைக்கு எதிராக குரல் கொடுப்போம், பெண்களை இழிவுபடுத்தும் செயல்களை புறக்கணிப்போம், பெண்களுக்கான உதவி எண் 181 என்பது குறித்த விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தி கொண்டு கோஷமிட்டபடி சென்றனர்.

விழிப்புணர்வு பேரணியில் சகி ஒன் ஸ்டாப் சென்டர் மைய நிர்வாகி ஜெயராணி, மகளிர் காவல் உதவி ஆய்வாளர் ரத்னபால் சாந்தி, பெண்கள் மேம்பாட்டு ஒருங்கிணைப்பாளர் புஷ்பராஜ், சமூக நலத்துறை விரிவாக்க அலுவலர்கள், ஊர் நல அலுவலர்கள், ஒன் ஸ்டாப் சென்டர் பணியாளர்கள், குழந்தைகள் பாதுகாப்பு அலகு பணியாளர்கள், மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் இதில் கலந்து கொண்டனர்,



வரலாறு உலகம்

# தற்காலிக போர் நிறுத்தம் 25 பிணைக் கைதிகளை விடுவித்தது ஹமாஸ்



**காசா : நவ. 26,**

**முதல் குழுவாக 25 பிணைக் கைதிகளை ஹமாஸ் விடுவித்துள்ளது என இஸ்ரேல் பாதுகாப்பு படை தெரிவித்துள்ளது.**

கடந்த அக்.7-ம் தேதி பாலஸ்தீனத்தில் உள்ள ஹமாஸ் தீவிரவாதிகள் இஸ்ரேல் மீது திடீர் ஏவுகணை தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலில் இஸ்ரேல் தரப்பில் 1,200 பேர் உயிரிழந்தனர். மேலும், இஸ்ரேலில் இருந்து 200-க்கும் மேற்பட்டோர் பிணைக் கைதிகளாக பிடித்துச் செல்லப்பட்டனர். இதையடுத்து, இஸ்ரேல் நடத்திய போரில் காசா பகுதியில் இதுவரை 13,000 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இந்த நிலையில், போர் நிறுத்தம் தேவை என அமெரிக்க உள்ளிட்ட நாடுகள் வலியுறுத்தி வந்தனர்.

அந்த வகையில், பிணைக் கைதிகளை விடுவிக்க ஏதுவாக, 4 நாட்களுக்கு போரை நிறுத்துவதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அறிவித்தார். அதோடு, 50 பிணைக் கைதிகள் விடுவிக்கப்படும் அதே வேளையில், இஸ்ரேல் சிறையில் இருந்து 150 பாலஸ்தீனர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் தகவல் வெளியானது. அதாவது இஸ்ரேல் சிறைகளில் உள்ள பாலஸ்தீன பெண்கள், குழந்தைகள் விடுவிக்கப்படுவார்கள் என்று கத்தார் தெரிவித்தது.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அறிவித்தபடி தற்காலிக போர் நிறுத்தம் தொடங்கியதை அடுத்து ஹமாஸ் தங்கள் கட்டுப்பாட்டில் இருந்த பிணைக் கைதிகளை விடுவித்துள்ளது. 13 இஸ்ரேலியர்கள் மற்றும் 12 பிறநாட்டினர் என மொத்தம் 25 பிணைக்கைதிகளை ஹமாஸ் முதல் குழுவாக விடுதலை செய்துள்ளது.

13 இஸ்ரேலிய பிணைக் கைதிகளை தங்கள் நாட்டின் பாதுகாப்புப் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டதாக இஸ்ரேலிய பாதுகாப்பு படை வட்டாரம் தெரிவித்துள்ளது. பிணைக் கைதிகள் செஞ்சிலுவைச் சங்கத்தினர் மூலமாக இஸ்ரேல் அனுப்பப்பட்டுள்ளனர். "விடுதலை செய்யப்பட்டவர்களில் 13 இஸ்ரேலிய குடிமக்கள் உள்ளனர். 10 தாய்லாந்து குடிமக்கள் மற்றும் ஒரு பிலிப்பைன்ஸ் குடிமகன்" என இஸ்ரேல் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஹமாஸ் பிணைக் கைதிகளை விடுவித்த அதேநேரம், இஸ்ரேல் சிறையில் இருந்து 39 பாலஸ்தீன பெண்கள் மற்றும் குழந்தைகளை விடுவிக்கப்பட்டுள்ளனர்.

# உலகின் மிகப்பெரிய பனிக்கட்டி நகரத் தொடங்கியது டெல்லியைப் போல இரு மடங்கு பெரியது




**வெடல் கடல் : நவ. 26,**

**வெடல் கடல் பகுதியில் தரைதட்டி நின்ற டெல்லியைப் போல இரண்டு மடங்கு பெரிதாக இருக்கும் உலகின் மிகப் பெரிய பனிக்கட்டி, 30 ஆண்டுகளுக்குப் பிறகு முதன்முறையாக நகரத் தொடங்கியுள்ளது.**

வெடல் கடல் பகுதியில் சிக்கியிருந்த உலகின் மிகப் பெரிய 'ஏ23ஏ' பனிக்கட்டி, 30 ஆண்டுகளுக்குப் பிறகு முதல்முறையாக நகரத் தொடங்கியுள்ளது. அண்டார்டிகா கண்டத்தின் எல்லையிலிருந்து கடந்த 1986-ம் ஆண்டு உடைந்து நகரத் தொடங்கிய ஏ23ஏ பனிக்கட்டி, சிறிது காலத்திலேயே வெடல் கடல் பகுதியில் தரைதட்டி நின்றது. அதன் பிறகு அந்தப் பனிக் கட்டி மிகப் பெரிய பனித் தீவாக திகழ்ந்து வந்தது. சுமார் 4,000 சதுர கி.மீ. பரப்பளவு கொண்ட அந்தப் பனிக்கட்டி, உலகிலேயே மிகப் பெரியது ஆகும். டெல்லியைப் போல் இரண்டரை மடங்குக்கும் மேல் பெரிய இந்தப் பனிக்கட்டி, 400 மீட்டர் உயரம் கொண்டது.

இத்தனை ஆண்டுகள் கழித்து இந்தப் பனிக்கட்டி நகரத் தொடங்கியதற்கான காரணம் குறித்து நிபுணர்கள் ஆய்வு செய்து வருகின்றனர். மேலும், பனிக்கட்டி நகருவதையும் அவர்கள் உன்னிப்பாக கவனித்து வருகின்றனர். தெற்குஜார்ஜியா பகுதிக்கு அருகே அந்தப் பனிக்கட்டி தரைதட்டினால் அங்குள்ள கடல்வாழ் உயிரினங்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படும் என்று கூறப்படுகிறது. இருந்தாலும், இந்தப் பனிக்கட்டி உருகுவதால் அதிலுள்ள கனிமப் பொருள்கள் வெளிவந்து சுற்றுச்சூழலை மேம்படுத்தும் என்றும் கூறப்படுகிறது.

# ரூ.8 கோடிக்கு ஏலத்திற்கு வரும் நடிகரின் நெக்லஸ்



**அமெரிக்கா : நவ. 26,**

**பிரபல அமெரிக்க பாடகரும், நடிகருமான எல்விஸ் பிரெஸ்லி 'ராக் அண்ட் ரோலின் மன்னன்' என போற்றப்பட்டவர்.**

1954-ம் ஆண்டு இசை துறைக்குள் நுழைந்த இவர் ராக் அண்ட் ரோல் இசையின் தொடக்க வடிவமான 'ராக்கபிலிட்டி' இசை நிகழ்ச்சிகளை நடத்திய முதல் கலைஞர்களுள் ஒருவராக இருந்தார். 1970-ம் ஆண்டு மறைந்த இவர் அணிந்திருந்த சிங்க நக நெக்லஸ் மிகவும் பிரசித்தி பெற்றது. மேடை நிகழ்ச்சிகள் மற்றும் எல்விஸ் பங்கேற்கும் நிகழ்ச்சிகளின் போது அவர் அந்த நெக்லசை அணிந்து செல்வது வழக்கம். 1975-ம் ஆண்டு முகமது அலியை சந்தித்த போது இந்த நெக்லசை அணிந்திருந்தார்.

அவரது இந்த நெக்லஸ் எல்விஸ் பிரெஸ்லி அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. தற்போது அந்த நெக்லஸ் ஏலத்திற்கு செல்கிறது. இந்த நெக்லஸ் ஒரு மில்லியன் டாலர் (இந்திய மதிப்பில் சுமார் ரூ. 8 கோடி) வரை ஏலம் போகும் என்று நிபுணர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

# பயங்கரவாத ஆதரவு பேச்சு ஸ்பெயின், பெல்ஜியம் பிரதமர்களுக்கு

## இஸ்ரேல் கண்டனம்



**டெல் அவிவ் : நவ. 26,**

**அந்த நாடுகளில் உள்ள இஸ்ரேல் தூதர்கள் அவர்களுக்கு எதிராக அதிகாரப்பூர்வ கண்டனம் தெரிவிக்கும்படி கோஹென் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.**

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் பயங்கரவாத அமைப்புக்கு இடையேயான மோதல் ஒரு மாதத்திற்கு மேலாக நீடித்து வருகிறது. 49 நாள் போரை அடுத்து பணய கைதிகளை விடுவிக்கும் முயற்சியில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இரு தரப்பினர் இடையே 4 நாட்கள் போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டு உள்ளது. இதன் ஒரு பகுதியாக, எகிப்தின் ரபா எல்லை பகுதியில் இஸ்ரேலிய பணய கைதிகள் 13 பேர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை விடுதலை செய்யப்பட்டனர்.

இதனை முன்னிட்டு, எகிப்தின் ரபா எல்லை பகுதியில், ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்செஸ் மற்றும் பெல்ஜியத்தின் பிரதமர் அலெக்சாண்டர் டி குரூ ஆகியோர் கூட்டாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பத்திரிகையாளர் சந்திப்பை நடத்தினர். இதில் பேசிய சான்செஸ், சர்வதேச சமூகம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என அனைவரும் பாலஸ்தீனத்திற்கு அங்கீகாரம் வழங்குவதற்கான நேரம் வந்துள்ளது. ஐரோப்பிய ஒன்றியம், அதுபோன்று இணையவில்லை என்றால், ஸ்பெயின் தனது சொந்த முடிவை எடுக்கும் என்று பேசினார்.

இதனை தொடர்ந்து பெல்ஜியத்தின் பிரதமர் அலெக்சாண்டர் டி குரூ, பாலஸ்தீனத்திற்கு அங்கீகாரம் வழங்குவது பற்றி எதுவும் கூறாதபோதும், அவர் பேசும்போது, வன்முறையை நிறுத்த வேண்டும். பணய கைதிகளை விடுவிக்க வேண்டும். உதவிபொருட்கள் காசாவுக்கு சென்று சேர செய்ய வேண்டும். முதலில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதே முன்னுரிமையாக இருக்க வேண்டும் என பேசினார்.

நிரந்தர போர்நிறுத்தம் வேண்டும் என்று வலியுறுத்திய அவர், அதற்கான தேவை மற்றும் நம்பிக்கை உள்ளது என்றும் கூறினார். பொதுமக்கள் கொல்லப்படுவது நிறுத்தப்பட வேண்டும். நிறைய மக்கள் உயிரிழந்து விட்டனர். காசாவை அழிப்பது என்பது ஏற்று கொள்ள முடியாதது. ஒரு சமூகம் அழிக்கப்படுகிறது என்பதனையும் நாங்கள் ஏற்க முடியாது என்று அவர் பேசினார்.

ஸ்பெயின் மற்றும் பெல்ஜியத்தின் பிரதமர்களின் இந்த பேச்சுக்கு இஸ்ரேல் கண்டனம் தெரிவித்து உள்ளது. பாலஸ்தீனியர்களை மனித கேடயங்களாக பயன்படுத்தி எங்களுடைய குடிமக்களை ஹமாஸ் அழித்தனர். மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களை செய்த ஹமாஸ் அமைப்பினருக்கு எதிராக முழு பொறுப்பையும் அவர்கள் சுமத்தவில்லை என்று இஸ்ரேல் எதிர்ப்பு தெரிவித்து இருந்தது.

இதுபற்றி இஸ்ரேல் வெளியுறவு மந்திரி எலி கோஹென் கூறும்போது, பயங்கரவாதத்திற்கு ஆதரவு தெரிவித்த ஸ்பெயின் மற்றும் பெல்ஜியம் பிரதமர்களின் பொய்யான பேச்சுக்கு நாங்கள் கண்டனம் தெரிவிக்கின்றோம் என்று கூறியுள்ளார். அவர்களின் பேச்சுகளுக்காக, அந்த நாடுகளில் உள்ள இஸ்ரேல் தூதர்கள் அவர்களுக்கு எதிராக அதிகாரப்பூர்வ கண்டனம் தெரிவிக்கும்படியும் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

# பாகிஸ்தானில் வணிக வளாகத்தில் பயங்கர தீ விபத்து : 11 பேர் பலி



**லாகூர் : நவ. 26,**

**தீ விபத்து ஏற்பட்ட வணிக வளாகத்தில் இருந்து 50 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.**

பாகிஸ்தான் நாட்டின் கராச்சியில் உள்ள ரஷித் மின்ஹஸ் சாலையில் பல அடுக்குமாடிகளை கொண்ட வணிக வளாகம் அமைந்துள்ளது. இந்த வணிக வளாகத்தில் நேற்று பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இந்த தீ விபத்தில் வணிக வளாகத்தில் இருந்த ஊழியர்கள், வாடிக்கையாளர்கள், பொதுமக்கள் சிக்கிக்கொண்டனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற தீயணைப்பு, மீட்புக்குழுவினர் வணிக வளாகத்தில் பற்றி எரிந்து வரும் தீயை அணைக்க முயற்சித்தனர். மேலும், வணிக வளாகத்திற்குள் சிக்கிய 50 பேரை உயிருடன் மீட்டுள்ளனர். ஆனால், இந்த தீ விபத்தில் இதுவரை 11 பேர் உயிரிழந்துள்ளனர். வணிக வளாகத்தில் மேலும் பலர் சிக்கியுள்ளதால் அவர்களை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

தீ தொடர்ந்து வணிக வளாகத்தின் பிற பகுதிகளுக்கும் பரவுவதால் அதை கட்டுப்படுத்த கூடுதலாக தீயணைப்புப்படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். தீ விபத்துக்கான காரணம் குறித்து இதுவரை தகவல் வெளியாகவில்லை.

# போர் நிறுத்தத்திற்கு பிறகு ஹமாசின் சுரங்கங்கள் அனைத்தும் அழிக்கப்படும் : இஸ்ரேல்



**இஸ்ரேல் : நவ. 26,**

**காசா மீதான 4 நாள் போர் நிறுத்தத்துக்கு பிறகு தாக்குதல் தொடரும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு தெரிவித்து இருந்தார்.**

இந்த நிலையில் இஸ்ரேல் பாதுகாப்புப் படையின் செய்தித் தொடர்பாளர் கூறும்போது, "காசாவில் போர் நிறுத்தம் முடிவுக்கு வந்ததும் தீவிரமாக சண்டையை தொடர திட்டமிட்டுள்ளோம். இன்னும் ஹமாசின் பல இலக்குகள், பல சுரங்கங்கள் தகர்க்கப்பட உள்ளது. அவற்றில் சிலவற்றை போர் நிறுத்தம் தொடங்குவதற்கு முன்பே அழித்து விட்டோம். போர் நிறுத்தம் முடிவுக்கு வந்த பிறகு ஹமாஸ் அமைப்பின் பல சுரங்கங்கள் அழிக்கப்படும்.

கூடுதல் இஸ்ரேல் பிணைக்கைதிகள் விடுவிக்கப்படாவிட்டால் போர் நிறுத்தம் 27-ந்தேதி காலாவதியாகும். காசா மக்கள், வடக்கு பகுதிக்கு செல்ல இஸ்ரேல் பாதுகாப்புப்படை அனுமதிக்காது" என்றார்.

# டாக்டர், ஜிம் பயிற்சியாளர் – 33 வயதில் மாரடைப்பு இன்ஸ்டாகிராம் பிரபலம் மரணம்



**சாவோ பாவ்லோ : நவ. 26,**

**சமீபத்தில், கரோலின் சாஞ்செஸ் என்பவருடன் அவருக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டு இருந்தது.**

பிரேசில் நாட்டின் சாவோ பாவ்லோ நகரை சேர்ந்தவர் ருடால்ப் துவார்த் ரிபெய்ரோ டாஸ் சான்டோஸ் (வயது 33). டாக்டரான இவர் ஜிம் பயிற்சியாளராகவும் இருந்துள்ளார். இவர் ஜிம்மில் மேற்கொள்ளும் உடற்பயிற்சிகள் பற்றிய புகைப்படங்கள், வருங்கால மனைவியுடன் செலவிட்ட நேரம் உள்ளிட்ட அன்றாடம் நடைபெறும் நிகழ்வுகளை பற்றிய புகைப்படங்களை இன்ஸ்டாகிராமில் பகிர்ந்து வந்திருக்கிறார்.

அவரிடம் சிகிச்சை பெற்ற நோயாளிகள், தடகள வீரர்கள் மற்றும் அவர் வழிகாட்டிய பிற உடற்பயிற்சியாளர்களுக்கு கிடைத்த ஆச்சரியம் தரும் முடிவுகளையும் அவர் வெளியிட்டு வந்துள்ளார். இந்நிலையில், தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற அவர் திடீரென காலமானார். அவர் ஸ்டீராய்டுவகை மருந்துகளை உட்கொண்டார் என்றும் அதனால் மரணம் அடைந்து விட்டார் என்றும் முதலில் தகவல் வெளியானது. எனினும், இந்த செய்தியை அவர் வேலை செய்து வந்த மருத்துவமனை மறுத்துள்ளது.

அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு அதனால் உயிரிழந்து உள்ளார் என விளக்கம் அளிக்கப்பட்டு உள்ளது. சமீபத்தில், கரோலின் சாஞ்செஸ் என்பவருடன் அவருக்கு நிச்சயிக்கப்பட்டு இருந்தது. டாக்டர் சான்டோஸ் வேலை செய்த மருத்துவமனையிலேயே, ஊட்டச்சத்து நிபுணராக சாஞ்செஸ் பணியாற்றி வந்துள்ளார். வருங்கால கணவரின் மறைவை தொடர்ந்து, அவர் கிடார் வாசித்து, பாடல் பாடும் வீடியோ ஒன்றை சாஞ்செஸ் உருக்கத்துடன் பகிர்ந்து உள்ளார்.

எங்களுடைய நெருக்கத்தின் ஒரு சிறிய துளி. என்னுடைய அன்புக்குரியவர் நாங்கள் விரும்ப கூடிய பாடலை பாடுகிறார் என தெரிவித்து உள்ளார். சான்டோஸ் உடற்பயிற்சி செய்யும் வீடியோ ஒன்று பகிரப்பட்டு, அதில் பலரும் இரங்கல் செய்தியை வெளியிட்டு வருகின்றனர்.

# ரூ.625 கோடி இழக்க போகிறதா எக்ஸ்?

## மஸ்க் தீவிர ஆலோசனை



**அமெரிக்கா : நவ. 26,**

**கருத்து பரிமாற்றங்களுக்கான உலகின் முன்னணி சமூக வலைதளமாக இருந்த டுவிட்டரை, அமெரிக்காவின் நம்பர் 1 கோடீசுவரரான எலான் மஸ்க், கடந்த 2022 அக்டோபர் மாதம் விலைக்கு வாங்கினார்.**

அந்நிறுவனத்தின் வருமானத்தை அதிகரிக்க பல அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வந்தார். அதன் ஒரு பகுதியாக நிறுவன பெயரை எக்ஸ் என மாற்றினார். தொடர்ந்து தலைமை செயல் அதிகாரி உள்ளிட்ட பல பணியாளர்களை பணிநீக்கம் செய்தார். பல பொறுப்புகளில் புதிய பணியாளர்களை நியமித்தார்.

ஆனால், மஸ்கின் மாற்றங்களால் நிறுவனத்தின் வருமானம் அவர் எதிர்பார்த்ததை போல அதிகரிப்பதற்கு பதிலாக குறைய தொடங்கியது. எக்ஸ் போன்ற சமூக வலைதள நிறுவனங்களின் முக்கிய வருமானமான விளம்பர வருவாய் குறைந்து வந்தது. அக்டோபர் மாதம் தொடங்கி தற்போது வரை நடைபெற்று கொண்டிருக்கும் இஸ்ரேல்-ஹமாஸ் போர் நாளுக்கு நாள் தீவிரமடைந்து வரும் நிலையில் இரு தரப்பினருக்கும் ஆதரவாகவும், எதிராகவும் பலர் சமூக வலைதளங்களில் கருத்துக்களை பதிவிட்டு வருகின்றனர். அத்தகைய எக்ஸ் பதிவு ஒன்றில் யூதர்களுக்கு எதிரான கருத்தை ஒரு பயனர் பதிவிட்டிருந்தார். இதனை ஆமோதிக்கும் வகையில் எலான் மஸ்க் ஒரு கருத்தை பதிவிட்டார்.

இது பெரும் சர்ச்சையை கிளப்பியது. ஊடக விவகாரங்களை கவனித்து செய்தி வெளியிடும் மீடியா மேட்டர்ஸ் எனும் நிறுவனம், எக்ஸ் தளத்தில் யூதர்களை இனப்படுகொலை செய்த ஜெர்மனியின் அடால்ஃப் ஹிட்லர் மற்றும் அவரது நாஜி கட்சியினரை பெருமைப்படுத்தும் எக்ஸ் பதிவுகளுக்கு அருகில் ஆரக்கிள் உள்ளிட்ட முன்னணி நிறுவனங்களின் விளம்பரங்கள் வெளிவருவதை சுட்டி காட்டியிருந்தது.

இதையடுத்து எக்ஸ் நிறுவனத்திற்கு விளம்பரங்களை தந்து வந்த இருநூறுக்கும் மேற்பட்ட பல பன்னாட்டு நிறுவனங்கள் தங்கள் விளம்பரங்களை நிறுத்தி விட்டன. இதனால் எக்ஸ் நிறுவனம், இந்த ஆண்டு இறுதிக்குள் சுமார் ரூ.625 கோடி ($75 மில்லியன்) தொகை வரை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்காவின் பிரபலமான தி நியூயார்க் டைம்ஸ் பத்திரிக்கை செய்தி வெளியிட்டுள்ளது. இதையடுத்து, வருவாய் இழப்பை தடுக்க எலான் மஸ்க் தீவிரமாக ஆலோசித்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# காதலை முறித்ததால் கல்லூரி மாணவியை கொன்று உடலை ஏரிக்கரையில் வீசிய காதலன்



**ரோம் : நவ. 26,**

**கல்லூரி மாணவியை பலமுறை கத்தியால் குத்தி கொடூரமாக கொலை செய்துள்ளார்.**

இத்தாலி நாட்டின் வினிடோ மாகாணத்தில் உள்ள பட்ஹா பல்கலைக்கழகத்தில் இறுதியாண்டு பயோமெடிக்கல் பட்டப்படிப்பு படித்து வந்த மாணவி ஹுலியா சியோஷெத்தின் (வயது 22). இவரும் பிலிப்போ டுரிடா (வயது 22) என்ற இளைஞரும் காதலித்து வந்தனர். இதனிடையே, கடந்த சில நாட்களுக்கு முன் கருத்து வேறுபாடு காரணமாக காதலர்கள் ஹுலியாவும், பிலிப்போவும் பிரிந்தனர்.

அதேவேளை, கல்லூரி பட்டமளிப்பு விழாவில் பங்கேற்க புதிய உடை வாங்க கடந்த 16ம் தேதி ஹுலி வணிக வளாகத்திற்கு சென்றுள்ளார். அவர் தனது முன்னாள் காதலன் பிலிப்போவையும் அழைத்து சென்றுள்ளார்.

ஆனால், வணிக வளாகத்திற்கு சென்ற ஹுலி வீடு திரும்பவில்லை. இது தொடர்பாக ஹுலியின் பெற்றோர் போலீசில் புகார் அளித்தனர். புகாரின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்த போலீசார் விசாரணை மேற்கொண்டு வந்தனர். அப்போது, ஹுலியின் வீட்டின் அருகே அவரது முன்னாள் காதலன் பிலிப்போவின் கார் வந்ததை கண்டுபிடித்தனர். அந்த காரில் வைத்து ஹுலியை பிலிப்போ தாக்கியது தெரியவந்தது. மேலும், தப்பியோட முயற்சித்த ஹுலியை சரமாரியாக தாக்கிய பிலிப்போ காரில் கடத்தி சென்றுள்ளார்.

பின்னர், தன்னுடனான காதலை முறித்ததால் ஆத்திரமடைந்த பிலிப்போ தனது முன்னாள் காதலி ஹுலியை ஆள்நடமாட்டமற்ற ஏரிக்கரைக்கு கடத்தி சென்றுள்ளார். அங்கு ஹுலியை பிலிப்போ கத்தியால் சரமாரியாக குத்திக்கொலை செய்துள்ளார். பின்னர் உடலை ஏரிக்கரையில் வீசிவிட்டு அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளார். இதனை தொடர்ந்து ஏரிக்கரையில் பிணமாக கிடந்த ஹுலியின் உடலைகைப்பற்றிய போலீசார் தப்பியோடிய முன்னாள் காதலன் பிலிப்போவை தீவிரமாக தேடி வந்தனர். தீவிர தேடுதலுக்கு பின் கிழக்கு ஜெர்மனி சாலைப்பகுதியில் பிலிப்போவை போலீசார் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட பிலிப்போவிடம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 37 ஒவ்வாமை உணவுகளால் பாதிக்கப்பட்ட இளம்பெண்



**ஜியோல் : நவ. 26,**

**தென்கொரிய தலைநகர் ஜியோல் பகுதியை சேர்ந்தவர் இளம்பெண் ஜோன்னே பேன். 21 வயதான இவர் டிக்டாக் மற்றும் இன்ஸ்டாகிராமில் தனக்கு சில உணவுகளால் ஒவ்வாமை இருப்பதாக ஒரு பட்டியலை பகிர்ந்துள்ளார்.**

இறப்பதற்கு 37 புதிய வழிகள் என்ற தலைப்பில் பதிவிட்ட அந்த பட்டியலில் ஏராளமான உணவு வகைகளால் அவருக்கு ஒவ்வாமை இருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. அதில், திராட்சை பழம் முதல் சில பழங்களாலும் தனக்கு ஒவ்வாமை இருப்பதாக கூறியிருந்தார்.

அதாவது, சில உணவுகளை சாப்பிட்ட 10 நிமிடங்களுக்குள் அவர் தோல் அலர்ஜியால் பாதிக்கப்படுவதாகவும், உடலில் அரிப்பு மற்றும் அதிக வெப்பம் போன்ற அறிகுறிகள் ஏற்படுவதாகவும் கூறியிருந்தார். அவர் 37 என்ற எண்ணை பயன்படுத்தினாலும் அதை விட அதிகமான எண்ணிக்கையில் அவருக்கு ஒவ்வாமை இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். அவரது இந்த வீடியோ வைரலாகி 5 கோடிக்கும் அதிகமான பார்வைகளை பெற்றுள்ளது.

வரலாறு விளையாட்டு

# என்னை அதிர்ஷ்டமில்லா கிரிக்கெட்டர் என்கின்றனர் – சஞ்சு சாம்சன்



**திருவனந்தபுரம் : நவ. 26,**

**“நான் நினைத்ததைவிட கிரிக்கெட்டில் சாதித்து இருக்கிறேன். தற்போது அடைந்துள்ள இடம் என்பது நான் நினைத்ததைவிட பெரிது” என்று இந்திய கிரிக்கெட் வீரர் சஞ்சு சாம்சன் தெரிவித்துள்ளார்.**

ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான ஐந்து போட்டிகள் கொண்ட டி20 தொடரில் சூர்யகுமார் யாதவ் தலைமையிலான இளம் வீரர்கள் அடங்கிய இந்திய அணி விளையாடி வருகிறது. இந்த அணியில் சஞ்சு சாம்சனுக்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை. கடந்த 2015 வாக்கில் இந்திய அணியில் அறிமுகமான சஞ்சு, கடந்த சில காலங்களாகவே இந்திய அணியில் நிரந்தர இடம்பிடிக்க முயன்றுவருகிறார். ஐபிஎல் போட்டிகளில் ஓர் அணியின் கேப்டனாக இருந்து வருகிறார். சமீப ஆண்டுகளாகவே சிறந்த பார்மிலும் உள்ளார். எனினும், அவருக்கு இந்திய அணியில் இடம் கிடைக்கவில்லை.

உலகக் கோப்பைக்கு முன்னதாக அவ்வப்போது ஆசிய கோப்பை போன்ற தொடர்களில் இந்திய அணிகளில் இடம்பெற்றிருந்தாலும், ரிசர்வ் பிளேயராகவே இடம்பெற்றிருந்தார். உலகக் கோப்பையில் நான்காமிடத்தில் சஞ்சு இடம்பெறலாம் எனச் சொல்லப்பட்டது. ஆனால், கே.எல்.ராகுல் மற்றும் ஸ்ரேயஸ் ஐயர் ஆகியோர் காயத்தில் இருந்து மீண்டு வந்ததால் அவருக்கு இடம்கிடைக்கவில்லை.

தற்போதைய ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான டி20 தொடரிலும் ரோகித் சர்மா, விராட் கோலி போன்ற சீனியர் வீரர்களுக்கு ஓய்வளிக்கப்பட்டதால், இளம் வீரர்கள் அடங்கிய இரண்டாம் கட்ட அணியே விளையாடி வருகிறது. இதிலும் சஞ்சுவுக்கு இடமில்லை. 2015 முதல் இப்போது வரை நிலையான இடம்பெற முடியாமல் இருப்பதை அடுத்து அவரது ரசிகர்கள் அவரை அதிர்ஷடமில்லாத வீரர் என்று அழைத்து வருகின்றனர்.

சமீபத்தில் அளித்த நேர்காணலில் மக்கள் இப்படி அழைப்பது குறித்து பேசியுள்ளார் சஞ்சு. அதில், “மக்கள் அனைவரும் என்னை அதிர்ஷ்டமில்லாத கிரிக்கெட்டர் என்கின்றனர். அப்படியல்ல. நான் நினைத்ததைவிட கிரிக்கெட்டில் சாதித்து இருக்கிறன். தற்போது அடைந்துள்ள இடம் என்பது நான் நினைத்ததைவிட பெரிது” என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக, ரோகித் குறித்து பேசிய சஞ்சு, “என்னிடம் வந்து பேசிய முதல் அல்லது இரண்டாவது நபர் ரோகித் சர்மாதன் என நினைக்கிறன். ‘ஐபிஎல் தொடரில் சிறப்பாக விளையாடுகிறீர்கள். ஆனால், மும்பைக்கு எதிராக அதிகமான சிக்ஸர்களை அடித்துள்ளீர்கள். நான் சிறப்பாக விளையாடுவதாக அடிக்கடி என்னிடம் கூறும் ஒரே நபர் அவர் மட்டுமே” என்று சஞ்சு சாம்சன் தெரிவித்துள்ளார்.

# டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டி

## பாகிஸ்தானுக்கு செல்ல சுமித் நாகல், சசிகுமார் மறுப்பு



**புதுடெல்லி : நவ. 26,**

**டேவிஸ் கோப்பை டென்னிஸ்போட்டிகளுக்காக பாகிஸ்தானுக்கு செல்ல இந்திய டென்னிஸ் வீரர்கள் சுமித் நாகல், சசிகுமார் முகுந்த் ஆகியோர் மறுப்பு தெரிவித்துள்ளனர்.**

டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டிக்கான அடுத்த சுற்று போட்டிகள் பாகிஸ்தானில் அடுத்த ஆண்டு பிப்ரவரியில் நடைபெறவுள்ளன. இந்நிலையில் இந்தப் போட்டியில் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக இந்திய டென்னிஸ் வீரர்கள் சுமித் நாகல், சசிகுமார் முகுந்த் ஆகியோர் தெரிவித்துள்ளனர். இதுதொடர்பாக அகில இந்திய டென்னிஸ் சங்கத்திடம் அவர்கள் தகவலைத் தெரிவித்துள்ளனர். இதையடுத்து அகில இந்திய டென்னிஸ் சங்கம், தனது அடுத்த செயற்குழுக் கூட்டத்தில் இது தொடர்பாக விரிவாக ஆலோசனை நடத்தவுள்ளது.

சுமித் நாகல், உலக டென்னிஸ் வீரர்கள் தரவரிசையில் 141-வது இடத்திலும், சசிகுமார் முகுந்த் 477-வது இடத்திலும் உள்ளன. இருவரும் பாகிஸ்தானுக்குச் சென்று டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டியில் விளையாட முடியாது என்று தெரிவித்துள்ளனர். ஆனால் இதற்கு சரியான காரணங்களை அவர்கள் தெரிவிக்கவில்லை.

பாகிஸ்தானில் உள்ள டென்னிஸ் ஆடுகளங்கள் புல் தரையாக இருப்பதால், தான் அங்கு விளையாட விரும்பவில்லை என்று சுமித் நாகல் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது. அதேநேரத்தில் தனிப்பட்ட காரணங்களுக்காக இந்தப் போட்டியில் பங்கேற்க முடியாத நிலை இருப்பதாக சசிகுமார் முகுந்த் தெரிவித்துள்ளார். இதையடுத்து டேவிஸ் கோப்பை போட்டியில் ராம்குமார் ராமநாதன் தலைமையில் இந்திய அணி பங்கேற்கும் என்று தெரிகிறது. மேலும் அணியில் திக்விஜய் பிரதாப் சிங்கும் இடம்பெறுவார் எனத் தெரிகிறது.

இந்நிலையில் சுமித் நாகல், சசிகுமார் விலகல் தொடர்பாக அகில இந்திய டென்னிஸ் சங்கம் (ஏஐடிஏ) அதிருப்தி தெரிவித்துள்ளது. இதகுறித்து ஏஐடிஏ பொதுச் செயலர் துபார் கூறியதாவது: இது தவறான விஷயமாகும். தேச நலன், தேசத்துக்காக விளையாடுகிறோம் என்று கூறும்போது, வீரர்கள் மறுப்பது சரியல்ல. தேசத்துக்காக விளையாட மாட்டோம் என்று கூறுவது எப்படி சரியாகும். இதுதொடர்பாக வரும் செயற்குழு கூட்டத்தில் ஆலோசிக்க உள்ளோம் என்று அவர் கூறினார்.

அண்மையில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் சுமித் நாகல், நிதி நெருக்கடியால் அவதிப்படுவதாகத் தெரிவித்திருந்தார். இதையடுத்து அவருக்கு டெல்லி லான் டென்னிஸ் சங்கம் ரூ.5 லட்சம் நிதியை அளித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்பு டேவிஸ் கோப்பை போட்டிகளில் இந்தியாவும், பாகிஸ்தானும் 2019-ல் மோதியிருந்தது. அப்போது பாதுகாப்புக் காரணங்களுக்காக கஜகஸ்தானில் போட்டி நடைபெற்றது.

# கேப்டனாக அணிக்கு பங்களிப்பு செய்ததில் மகிழ்ச்சி: சூர்யகுமார் யாதவ்




**விசாகப்பட்டினம் : நவ. 26,**

**ஆஸ்திரேலியாவுக்கு எதிராக விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற முதல் டி20 கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 2 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. 209 ரன்கள் இலக்கை துரத்திய இந்திய அணி ஒரு பந்தை மீதும் வைத்து 19.5 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 209 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. தொடக்க வீரர்களான ருதுராஜ் கெய்க்வாட் 0, யஷஸ்வி ஜெய்ஸ்வால் 21 ரன்களில் ஆட்டமிழந்தனர்.**

இதன் பின்னர் 3-வது விக்கெட்டுக்கு இணைந்த இஷான் கிஷன், கேப்டன் சூர்யகுமார் யாதவ் ஜோடி சிறப்பாக விளையாடி அணியின் வெற்றிக்கு முக்கிய பங்களிப்பை வழங்கியது. இஷான்கிஷன் 39 பந்துகளில், 5 சிக்ஸர்கள், 2 பவுண்டரிகளுடன் 58 ரன்களும் சூர்யகுமார் யாதவ் 42 பந்துகளில், 4 சிக்ஸர்கள், 9 பவுண்டரிகளுடன் 80 ரன்களும் விளாசினர். இந்த ஜோடி 112 ரன்கள் குவித்தது. இறுதிக்கட்டத்தில் ரிங்கு சிங் 14 பந்துகளில் விளாசிய 22 ரன்களும் அணியின் வெற்றியில் முக்கிய பங்கு வகித்தது.

இந்த வெற்றியின் மூலம் 5 ஆட்டங்கள் கொண்ட டி 20 கிரிக்கெட் தொடரில் இந்திய அணி 1-0 என முன்னிலை வகிக்கிறது. உலகக் கோப்பை தொடரின் இறுதிப் போட்டியில் வெறும் 18 ரன்கள் மட்டுமே சேர்த்து ஏமாற்றம் அளித்த சூர்யகுமார் யாதவ், தனது விருப்பமான டி20 வடிவில் அதிரடியாக விளையாடி ரன்கள் குவித்தது ரசிகர்களை வெகுவாக கவர்ந்தது. விசாகப்பட்டினம் போட்டிக்கு பின்னர் சூர்யகுமார் யாதவ் கூறியதாவது:

களத்தில் இஷான் கிஷன் மிகவும் உதவினார். பயமின்றி போட்டியை வென்று கொடுக்க வேண்டும் என்பது மிகவும் முக்கியமானதாக இருந்தது. அதனால் எந்தஒர் அச்சமுமின்றி விளையாடினேன். நான் அச்சமின்றி விளையாடுவதற்கு மறுமுனையில் இஷான் கிஷன் நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்தியது மிகவும் முக்கியமானதாக இருந்தது. ரிங்கு சிங், அழுத்தமான சூழ்நிலைகளில் கூட அமைதியாக செயல்படக்கூடியவர். அவர், பேட்டிங் செய்ய களத்துக்குள் வந்த போதும் நிதானம் காட்டினார். இது பார்ப்பதற்கு நன்றாக இருந்தது.

ஆஸ்திரேலிய அணி 200 ரன்களுக்கு மேல் குவித்த போது ஓய்வறையில் சிறிய பதற்றம் இருந்தது. ஆனாலும் அனைத்து வீரர்களும் உற்சாகமாக இருந்தனர். அவர்கள் போர்டில் ஸ்கோரைப் பார்த்தபோது, ஒரு விஷயத்தை மட்டுமே சொன்னார்கள், ‘இந்த விளையாட்டை வென்றால் அது உண்மையிலேயே மகிழ்ச்சியாக இருக்கும்’. என்றனர். அணியை வழிநடத்தியது பெருமையாக உள்ளது. கேப்டனாக முதல் போட்டியிலேயே அணிக்கு பங்களிப்பு செய்ததில் மகிழ்ச்சி அடைகிறேன். அடுத்த ஆட்டத்தை ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளேன் என்று சூர்யகுமார் யாதவ் கூறினார்.

வரலாறு சினிமா

# மனைவியுடன் புது வீட்டில் குடிபுகுந்த இயக்குநர் விஜய் : ரசிகர்கள் வாழ்த்து



**சென்னை : நவ. 26,**

**இயக்குநர் ஏ.எல். விஜய் தன் மனைவியுடன் பல கோடி ரூபாய் மதிப்புள்ள புதிய வீட்டில் குடிபுகுந்துள்ளார். இந்தப் புகைப்படங்களைப் பார்த்த ரசிகர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.**

தமிழில் ‘கிரீடம்’ படம் மூலம் இயக்குநராக அறிமுகமானவர் ஏ.எல்.விஜய். இவர், ‘மதராசப்பட்டினம்’, ‘தலைவா’ போன்ற பல ஹிட் படங்களைக் கொடுத்தார். இவருக்கும் நடிகை அமலாபாலுக்கும் முன்பு திருமணம் நடந்து விவாகரத்தானது. அதன்பிறகு இவர் 2019ல் ஐஸ்வர்யா என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். இப்போது இந்த தம்பதிக்கு ஒரு குழந்தையும் உள்ளது.

இந்த நிலையில், ஏ.எல். விஜய் புது வீடு ஒன்றை வாங்கியுள்ளார். இந்த வீட்டிற்கு பூஜை சமீபத்தில் போடப்பட்டது. அந்தப் பூஜையில் நடிகர் ஆர்யா, தனது மனைவி, மகளோடு கலந்து கொண்டார். இந்தப் புகைப்படங்களை ஆயிஷா தனது சமூகவலைதளப் பக்கத்தில் பகிர்ந்து, ‘விஜய் அண்ணா மற்றும் ஐஸ்வர்யா இருவரின் புது வீட்டிற்கு வாழ்த்துகள்’ எனக் கூறியுள்ளார். கோடிக்கணக்கில் பணம் போட்டு வாங்கி இருக்கும் விஜயின் புது வீட்டிற்கு ரசிகர்களும் தங்களது வாழ்த்துகளைக் கூறி வருகின்றனர்.

# நடிகைகள் சினிமாவில் இருக்க வேண்டும் என்றால் சிலவற்றை மறைத்தும் மறந்தும் தான் இருக்க வேண்டும் : குட்டி பத்மினி சர்ச்சை பேட்டி



**சென்னை : நவ. 26,**

**மன்சூர் அலிகான்-த்ரிஷா விவகாரம் கடந்த சிலநாட்களாக இணையத்தில் பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில், திரையுலகில் ரஜினி, விஜய் போன்ற மூத்த நடிகர்கள் பேசிய பேச்சுகளின் சில்மிஷமும், சிலரின் பாலியல் தொல்லைகளும் ஒவ்வொன்றாக வெளியே வரத் தொடங்கியுள்ளது.**

பொதுவெளியில் நடிகை த்ரிஷாவை நடிகர் மன்சூர் அலிகான் அவதூறு பரப்பும் விதமாக பேசி வந்த நிலையில், அவர்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை நடந்தப்பட்டது. இதனை அடுத்து, மன்சூர் பொதுவெளியில் நடிகை த்ரிஷாவிடம் மன்னிப்புக் கேட்டார். இதேசமயத்தில்தான் பிக் பாஸ்7 இல்லத்திற்குள் போட்டியாளராக உள்ள நடிகை விசித்ரா தன்னை தெலுங்கு டாப் ஹீரோ ஒருவர் பாலியல் அத்துமீறல் செய்ய முயன்றதாகக் கூறிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது. அந்த நடிகர் தெலுங்கு நடிகர் பாலகிருஷ்ணா என்பதையும் ரசிகர்கள் தெரிவித்து வருகின்றனர்.

இந்தப் பிரச்சினைகள் ஏற்படுத்திய தாக்கம் தமிழின் முன்னணி பிரபலங்கள் பலரையும் தோலுரித்துக் காட்டியுள்ளது. இயக்குநர் மனிஷா யாதவ், பிந்து மாதவி போன்ற நடிகைகளுக்கு இயக்குநர் சீனு ராமசாமி பாலியல் தொல்லைக் கொடுத்ததாக புகார் எழுந்தது. இதுமட்டுமல்லாது, ரஜினி நடிகை தமன்னாவுடன் ‘ஜெயிலர்’ படத்தில் நடனம் ஆடுவதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை எனவும், ஜோதிகா, சிம்ரனை குதிரை என விஜய் ஆபாசமாக பேசிய பழைய வீடியோக்களும் பொதுவெளியில் விவாதங்களைக் கிளப்பியது. மன்சூரை இத்தனை கேள்வி கேட்பவர்கள், இந்த முன்னணி பிரபலங்களை ஏன் எந்தக் கேள்வி கேட்பதில்லை என்ற சர்ச்சையும் கிளம்பியுள்ளது.

இது குறித்துதான் நடிகையும் இயக்குநருமான குட்டி பத்மினி தற்போது பேட்டி கொடுத்துள்ளார். ”த்ரிஷா குறித்து மன்சூர் அலிகான் பேசியது முற்றிலும் தவறு தான். அவரது மனதில் இருந்த வக்கிரம் வெளிப்பட்டது தான் பிரச்சினை ஆகி உள்ளது. ஆனால், நடிகர் ரஜினிகாந்த் தமன்னா உடன் நடிக்க வாய்ப்புக்கிடைக்கவில்லையே என பேசியதும், விஜய் நடிகைகள் குறித்து பேசியது எல்லாம் ஆபாசபேச்சாகவராது. அவர்கள் கண்ணியத்துடன் தான் பேசியுள்ளனர்” என்றும் குட்டி பத்மினி சர்டிஃபிகேட் கொடுத்துள்ளார்.

இதுமட்டுமல்லாது விசித்ரா பாலகிருஷ்ணா விவகாரம் குறித்து எழுப்பிய கேள்விக்கு, ”நடிகைகள் சினிமாவில் இருக்க வேண்டும் என்றால் சிலவற்றை மறைத்தும் மறந்தும் தான் இருக்க வேண்டும்” என அவர் பேசியுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# மீண்டும் வில்லி ஆனார் வசுந்தரா



வெப்சீரிஸை இயக்கிய லட்சுமி நாராயணன் ராஜூ இப்படத்தை இயக்குகிறார்.

**சென்னை : நவ. 26,**

**‘பேராண்மை’, ‘கண்ணை நம்பாதே’, ‘தலைக்கூத்தல்’ உள்பட பல படங்களிலும், ‘மாடர்ன் லவ் சென்னை’ என்ற வெப்தொடரிலும் நடித்துள்ள வசுந்தரா, வில்லியாக நடிக்க தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து அவர் கூறியதாவது: இனிமேல் சவாலான கேரக்டர்களில் நடிக்க விரும்புகிறேன். ஹீரோயின் என்றால் வருடத்துக்கு ஒன்று அல்லது இரண்டு படத்தில் மட்டுமே நடிக்க முடியும். ஆனால், எதிர்மறை கேரக்டரில் நடிக்கும்போது, நம் நடிப்புத்திறமையை வெளிப்படுத்த அதிக வாய்ப்பு கிடைக்கும். அதுபோல் நடித்தும் இருக்கிறேன். மக்களும் அந்த கேரக்டரை ரசிக்கும் அளவுக்கு மாறிவிட்டனர். இப்போது மல்டி ஸ்டாரர் கதையில் நெகட்டிவ் கேரக்டரில் நடித்து வருகிறேன். இப்படம் பெண்களை மையப்படுத்தி மாடர்ன் கிரைம் டிராமாவாக உருவாகிறது. ‘பப்கோவா’ என்ற

# ‘காந்தாரா : சாப்டர் ஒன்’ ஃபர்ஸ்ட் லுக் நவ.27-ல் ரிலீஸ்



**பெங்களூரு : நவ. 26,**

**ரிஷப் ஷெட்டி நடித்து பெரும் வரவேற்பை பெற்ற ‘காந்தாரா’ படத்தின் இரண்டாம் பாகத்தின் ஃபர்ஸ்ட் லுக் வரும் 27ஆம் தேதி வெளியாகிறது.**

ரிஷப் ஷெட்டி நடித்து, இயக்கிய படம் ‘காந்தாரா’. கிஷோர், சப்தமி கவுடா உட்பட பலர் நடித்திருந்தனர். ஹோம்பாலே பிலிம்ஸ் தயாரித்தது. தமிழ், இந்தி, தெலுங்கு, மலையாளம் உள்ளிட்ட மொழிகளிலும் இப்படம் வரவேற்பை பெற்றது. ரூ.16 கோடி செலவில் தயாராகி ரூ.400 கோடி வசூலித்து சாதனை படைத்தது. இதன் 2-ம் பாகம் உருவாகும் என்று படக்குழு அறிவித்திருந்தது.

இந்நிலையில், இப்படத்தின் முன் தயாரிப்பு பணிகள் நிறைவடைந்ததால் விரைவில் இப்படத்தின் படப்பிடிப்பு தொடங்க இருக்கிறது. இப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் வரும் 27ஆம் தேதி வெளியாகும் என்று படக்குழு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. இப்படத்துக்கு ‘காந்தாரா: சாப்டர் ஒன்’ என்று தலைப்பிடப்பட்டுள்ளது. பான் இந்தியா முறையில் உருவாகும் ‘காந்தாரா 2’ படம் 2024 ஏப்ரல் அல்லது மே மாதம் வெளியாகும் என கூறப்படுகிறது. இந்தப் படம் ‘காந்தாரா’ படத்தின் முன்கதையை அடிப்படையாக கொண்டு உருவாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

# “உண்மையைச் சொன்னால், அது புயலைக் கிளப்பிவிடும்” – ஞானவேல் ராஜாவுக்கு அமீர் பதில்



சென்னை : நவ. 26,

‘பருத்தி வீரன்’ படம் தொடர்பான பிரச்சினையில் அமீர் மீது தயாரிப்பாளர் ஞானவேல் ராஜா தொடர் குற்றச்சாட்டுகளை முன்வைத்த நிலையில், அதற்கு விளக்கமளித்து அமீர் அறிக்கை வெளியிட்டுள்ளார். அதில், “கடந்த சில தினங்களுக்கு முன்னர் தயாரிப்பாளர் ஞானவேல்ராஜா என் மீது சுமத்திய குற்றச்சாட்டுகளுக்கும், பரப்பிய அவதூறுகளுக்கும், என்னைப் பற்றிக் கூறிய வரம்புமீறிய வார்த்தைகளுக்கும், உண்மைக்குப் புறம்பான செய்திகளுக்கும் பதிலளிக்க கோரி என்னிடம் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்க கூடிய அனைத்து ஊடக நண்பர்களுக்காகவே இந்த அறிக்கை.

‘பருத்திவீரன்’ தொடர்பான வழக்கு, இன்னும் நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கின்ற காரணத்தினால், வழக்கறிஞரின் அறிவுறுத்தலின் பேரிலேயே நான் இன்னும் பதிலளிக்காமல் இருக்கிறேன். அதன் காரணமாகவே, ஊடக நண்பர்களைச் சந்திக்காமலும் இருக்கிறேன். இதில், வேறு எந்த காரணமும் கிடையாது. இருந்தாலும், தொடர்ச்சியாக இப்பிரச்னை ”யூடியூப்” உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் சென்று கொண்டிருக்கின்ற காரணத்தினால், சில விளக்கங்களை அளிக்க நான் விரும்புகிறேன்.

‘பருத்திவீரன்’ தொடர்பாகவும், என்னுடைய திரைப்பயணம் தொடர்பாகவும், ஞானவேல்ராஜா கூறிய கருத்துகளில் ஒன்றில் கூட உண்மையில்லை. அனைத்தும், புனையப்பட்ட பொய்கள். இது முழுக்க முழுக்க சமூகத்தில் எனக்கு இருக்கும் கண்ணியத்தைக் குறைக்கும் நோக்கத்தோடும், திரைத்துறையில் என்னுடைய பயணத்தை தடைசெய்யும் நோக்கத்தோடும் திட்டமிட்டு நடத்தப்படும் பொய்ப்பிரசாரமே. ‘பருத்திவீரன்’ திரைப்படம் தொடர்பாக, எனக்கும் ஞானவேல்ராஜாவுக்கும் இடையே எந்த ஒரு ஒப்பந்தமும் போடப்படவில்லை. எனவே, இல்லாத ஒப்பந்தத்தை நான் மீறவும் இல்லை. படத்தின், முதல் கட்டப் படப்பிடிப்புக்கு அவர் வழங்கிய தொகையைத் தவிர, அடுத்தடுத்த காலகட்டங்களில் படப்பிடிப்புக்கான தொகையைத் தராமல் படத்தை பாதியிலேயே நிறுத்திவிட்டு காணமல் போனவர் அவர்.

அதன் பின்னரே, நான் எனது “TEAM-WORK PRODUCTION HOUSE” நிறுவனத்தின் மூலம் அந்தப் படத்தின் படப்பிடிப்பை தொடர்ந்து நடத்தி முடித்தேன். மேலும், ‘பருத்திவீரன்’ படப்பிடிப்புச் சூழல் முழுவதையும் முற்றாக அறிந்த, இன்றைக்கு திரைத்துறையில் உயர்ந்த இடத்தில் இருக்கும் என் சகோதரர்களும், பணியாற்றிய அனைத்து தொழில்நுட்ப கலைஞர்களும் இப்பிரச்னையில், அமைதியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது எனக்கு வியப்பளிக்கிறது.

‘பருத்திவீரன்’ திரைப்படம் எந்த சூழலில் தொடங்கப்பட்டது? தொடங்குவதற்கான காரணம் என்ன? என்ற உண்மையை அறிந்த பெரிய மனிதர்களும், எனக்கு வாக்கு கொடுத்து ‘படத்தை நீங்களே வெளியிடுங்கள்’ என்று சொன்னவர்களும், அன்றும் வேடிக்கை பார்த்தார்கள். இன்றும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ‘பருத்திவீரன்’ திரைப்படத்தின் இறுதிக்கட்ட பஞ்சாயத்தை, நடத்தியவர்களும், முடித்து வைத்தவர்களும், சாட்சிக் கையெழுத்திட்டவர்களும் இன்றளவும் அமைதியாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

மொத்தத்தில், 17 வருடங்களுக்கு முன்பு என் கை பிடித்து வாக்கு கொடுத்தவரின் அன்புக்கு கட்டுப்பட்டு வேலை செய்த நான், இன்று சமூகத்தில் குற்றவாளியாக நிறுத்தப்பட்டிருக்கிறேன். நடந்த உண்மைகளைச் சொல்வதற்கு எனக்கு சில மணி நேரங்களே போதுமானது. ஆனால், அது பலருடைய வாழ்க்கையில் புயலைக் கிளப்பி விடும் என்ற காரணத்தினாலும், ஒட்டு மொத்த திரையுலகத்தையும் திசை திருப்பி விடும் என்ற காரணத்தினாலுமே நான் அமைதி காக்கிறேன். வேறு எதற்காகவும் அல்ல.

உண்மை இப்படியிருக்க, ஞானவேல் என்னைப் பற்றி கூறிய விசயங்களால் நான் அடைந்த மன உளைச்சலை விட, என் குடும்பத்தாரே அவரால் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற போதிலும், நானும், என் குடும்பத்தாரும் இதையெல்லாம் கடந்து வந்து விடுவோம், துளியும் அவரது சூழ்ச்சிக்கு பலியாக மாட்டோம் என்பதைத் தெளிவாக தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், அவரை வழிநடத்தும் பெரியவர்கள், இதுபோல் யாரையும் அவதூறாக பொதுவெளியில் பேச வேண்டாம், என அவருக்கு அறிவுறுத்துமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பூமியில், “அநியாயமும், அக்கிரமங்களும், அநீதியும் தலை விரித்தாடுகின்ற போது கண்ணன் அவதாரம் எடுப்பார்..” என்ற கீதையின் வாசகத்தைப் போல, தமிழகத்தில் நடக்கும் இந்நிகழ்வுகளுக்கு, அமெரிக்காவில் இருந்து நடந்த உண்மைகளை வெளிச்சத்திற்கு கொண்டு வந்த என்னுடைய நண்பரும், தயாரிப்பாளருமாகிய கணேஷ் ரகுவுக்கு என் உளப்பூர்வமான, கோடானகோடி நன்றிகள். ‘பருத்திவீரன்’ தொடர்பான வழக்கு மற்றும் விபரங்கள் அனைத்தும் 17 ஆண்டுகளுக்கு முன்பு நடந்ததாலும்...



▶ புதுக்கோட்டை மாவட்டம், வம்பன் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில், கூட்டுறவுத்துறையின் சார்பில், பயனாளிகளுக்கு நகைக்கடன் தள்ளுபடி சான்றிதழ் மற்றும் நகைகளை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் நேற்று வழங்கினார். உடன் திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர் வள்ளியம்மை தங்கமணி, அறந்தாங்கி சரக துணைப் பதிவாளர் ஆறுமுகப்பெருமாள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.




▶ இந்தியத் தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில், நில சீர்த்திருத்த ஆணையர் மற்றும் வாக்காளர் பட்டியல் பார்வையாளர் வெங்கடாசலம், தலைமையில், புதுக்கோட்டை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா,முன்னிலையில், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடனான ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

# திருவரங்குளம் செவிலியர் பயிற்சி நிலையத்தில் பெண்களுக்கெதிரான உலக வன்முறை தடுப்பு தினம் அனுசரிப்பு

திருவரங்குளம், நவ.26-

பெண்களுக்கு எதிரான உலக வன்முறை தடுப்பு தினம். புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளம் மண்டல சுகாதார பயிற்சி நிலையத்தில் பெண்களுக்கு எதிரான உலக வன்முறை தடுப்பு தினம் அனுசரிக்கப்பட்டது.



நிகழ்ச்சிக்கு திருவரங்குளம் முதுநிலை சுகாதார அலுவலர் மரு.கார்திகேயன் தலைமை தாங்கினார், திருவரங்குளம் செவிலியர் பயிற்சி நிலையத்தின் முதல்வர் ரா.மாலைமணி வரவேற்புரையாற்றினார், சிறப்பு விருந்தினராக புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி சமூகமருத்துவம் மற்றும் நோய்தடுப்புதுறை மூத்த உதவி பேராசிரியர் மருத்துவர் கே.சரவணன்கலந்துகொண்டு பேசும்போது பெண்களுக்கு இன்றைய சூழலில் நடக்கும் வன்முறைகளை தடுக்கும் முறைகள் குறித்து விழிப்புணர்வூட்டும் வகையில் எடுத்துக்கூறியதுடன், பெண்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பு, சொத்து அரசியல் போன்றவற்றில் முன்னுரிமை மற்றும் சமவாய்ப்பு அளித்தல் வேண்டும், ஊடகங்கள் மற்றும் சினிமா துறையில் பெண்களை தவறாக சித்தரிக்ககூடாது என்றும் பெண்களிடம் மதிப்போடும் மரியாதையோடும் நடத்துகொள்வது பற்றி பெற்றோர்கள் ஆண் பிள்ளைகளிடம் சொல்லி தரவேண்டும் என்பனவற்றை தெளிவாக எடுத்துக்கூறினார்.

மேலும் பெண்கள் தீய பழக்கங்களான மது அருந்துதல், புகை பிடித்தல் போன்ற தீய பழக்கங்களுக்கு அடிமையாகக்கூடாது என்றும் கூறினார்.

இதையே திருக்குறள் மூலமும், பாரதியார், பாரதிதாசன் சீவகசிந்தாமணி உள்ளிட்ட புராணங்கள் வாயிலாகவும் கவிதைகள் மூலமாகவும் சுட்டிக்காட்டினார். இந்த நிகழ்ச்சியில் செவிலியர் பயிற்சி மாணவிகள் பெண்களுக்கெதிராக நடக்கும் வன்முறைகளை நடனம், கவிதைகள் பாடல்கள் மூலமாக விழிப்புணர்வு ஏற்படுத்தினர், நிறைவில் திருவரங்குளம் மண்டல சுகாதார பயிற்சி நிலையத்தின் சுகாதார ஆய்வாளர் கண்ணன் நன்றி உரையாற்றினார், நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அனைவரும் பெண்களுக்கு எதிரான வன்முறை தடுப்பு உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.



▶ புதுக்கோட்டை மாவட்டம் இராஜகுளத்தூரில் நடைப்பெற்ற அதிதூதர் மிக்கேல் சம்மனசு தேவாலயம் அடிக்கல் நாட்டு விழாவில் தஞ்சை மறைமாவட்ட பரிபாலகர் சகாயராஜ் மற்றும் பங்குத்தந்தை, அருட்தந்தையர்கள் அருட்சகோதரிகள் இறை மக்கள் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட திமுக வர்த்தக அணி அசோக்பாண்டியன், புதுக்கோட்டை முன்னாள் நகர் மன்றத் தலைவர் துரைதிவ்யநாதன், உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




## கண்ணீர் அஞ்சலி

புதுக்கோட்டை டவுன் சார்லஸ் நகரில் வசித்து வரும் ஒடுகம்பட்டி

எஸ்.மூக்கையா சோழகர் மகனும், எஸ்.மணிகண்டன்,

எஸ்.பாண்டிதுரை, எஸ். திருமாறன் ஆகியோரின் தகப்பனாரும்

அகில இந்திய கட்டுனர் சங்கம், புதுக்கோட்டை மையத்தின் முன்னாள் தலைவரான

ஒடுகம்பட்டி

**S.M.சேட்டு** அவர்கள்

(நெடுஞ்சாலைத்துறை மாநில முதல் வகுப்பு ஒப்பந்தக்காரர்)

25.11.2023 நேற்று அதிகாலை இயற்கை எய்தினார் அண்ணாரின் இறுதி ஊர்வலம் நல்லடக்கம் நேற்று மாலை 3.00 மணியளவில் சார்லஸ் நகரில் உள்ள அவரது இல்லத்திலிருந்து புறப்பட்டு ஒடுகம்பட்டியில் நல்லடக்கம் நடைபெற்றது என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

**குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள்**

புதுக்கோட்டை சார்லஸ் நகர்

நிஷா


PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

# தமிழகத்தில் நாள் ஒன்றுக்கு 50 பேருக்கு டெங்கு உறுதி : அமைச்சர் மா.சுப்பிரமணியன்



சென்னை : நவ. 26, தமிழகத்தில் டெங்கு பாதிப்பு இல்லை என்ற நிலை மாறி தற்போது நாள் ஒன்றுக்கு 40 முதல் 50 பேருக்கு டெங்கு காய்ச்சல் உறுதி செய்யப்படுவதாகவும், ஜனவரியில் இருந்து தற்போது வரை 7 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

தமிழகம் முழுவதும் சுகாதாரத்துறை சார்பில் நேற்று மழைக்கால மருத்துவ முகாம் நடைபெறுகிறது. சென்னையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "ஒவ்வொரு வாரமும் 1000 முகாம்கள் என ஆரம்பித்து, தற்போது அவசியத்திற்கு ஏற்ப 2 ஆயிரம் முகாம்கள் வரை நடத்தப்படுகிறது. கடந்த நான்கு வாரங்களில் மட்டும் 8380 முகாம்கள் நடைபெற்று முடிந்திருக்கிறது. மருத்துவத்துறையின் வரலாற்றில்வேறுஎப்போது இல்லாதவகையில், தொடர் மருத்துவ முகாம்கள் நடத்தப்படுவதும், 8 ஆயிரத்திற்கு மேற்பட்ட முகாம்கள் நடத்தப்படுவது இதுவே முதல் முறை.

இந்திய வரலாற்றிலேயே வட கிழக்கு பருவ மழைக்காக 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட மருத்துவ முகாம் நடத்தி தமிழக அரசு சாதனை புரியவுள்ளது. ஒவ்வொரு வாரமும்ஒருலட்சத்துக்கும் மேற்பட்டோர் இந்த முகாம்கள் மூலம் பயனடைகிறார்கள். அதில் 400-500 பேர் நோய்வாய்பட்டவர்களாக கண்டறியப்படுகிறார்கள். கடந்தஇரண்டுஆண்டுகளில் மட்டும் சென்னையில் உள்ள மொத்த மழைநீர் வடிகால்களில்40விழுக்காடு அமைக்கப்பட்டுள்ளது. இதனால் மழையை கண்டால் சென்னை மக்கள் அஞ்சும் நிலை மாறி, இன்று மகிழ்ச்சி அடைந்து வருகிறார்கள். இதற்கு முக்கிய காரணம் மழை நீர் வடிகால். கடந்த ஜனவரி 1ம் தேதி முதல் நேற்று வரை டெங்கு காய்ச்சலால் 7059 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். நாள் ஒன்றுக்கு 40 முதல் 50 பேருக்குடெங்குகாய்ச்சல் உறுதி செய்யப்படுகிறது. தற்போது வரும் இருமல் 20 முதல் 25 நாட்கள் வரை நீடிக்கிறது.

அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு கால்வலி, தலைவலி நிறைய இருந்தது. ஒவ்வொருதுறை மருத்துவர்களும் ஆய்வு செய்து வருகிறார்கள். இப்போது பிசியோவும் ஆய்வு செய்யவுள்ளனர். சென்னையில் இருக்கும் ஒட்டுமொத்த நாய்களும் கணக்கெடுக்கப்படவுள்ளது. மேலும், நாய்களுக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசி போடப்படும். பொதுமக்களும் வெறிபிடித்த நாய்களை கண்டால் மாநகராட்சிக்கு தெரியப்படுத்தவும். ஒரு வெறிபிடித்த நாய் 27 நபர்களை கடிக்கும் வரை அந்த பகுதி மக்கள் விழிப்புணர்வு இல்லாமல் இருந்தது ஆச்சரியமாக இருக்கிறது. ரேபிஸ் நோயால் பாதிக்கப்பட்ட நாய் கடித்தவர்கள் பயப்பட தேவை இல்லை. முறையான சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது" என்றார்.



▶ மேற்கு தொடர்ச்சி மலையில் பெய்து வரும் தொடர் மழையால் வைகை அணையின் நீர்மட்டம் உயர்ந்து, முழு கொள்ளளவை எட்டி உள்ளது. மதுரை வைகை ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடத் தொடங்கியுள்ளது, இதை படத்தில் காணலாம்.



▶ காரைக்கால் மாவட்டத்திற்கு ஒவ்வொரு மாதமும் இரண்டு சனிக்கிழமைகளில் புதுவை ஜிப்மர் மருத்துவமனையில் இருந்து சிறப்பு மருத்துவர்கள் குழு காரைக்கால் அரசு பொது மருத்துவமனைக்கு வருகை புரிந்து காரைக்கால் வாழ் பொது மக்களுக்கு சிகிச்சைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கி வரும் நிலையில் நேற்று காலை 10.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை மூளை மற்றும் நரம்பியல் சம்பந்தமான சிறப்பு மருத்துவர்கள் வருகை புரிந்து சிகிச்சைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கினார்கள் இதில் ஏராளமான காரைக்கால் வாழ் பொதுமக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றார்கள்.

# ரூ.1.4 லட்சம் கோடி மதிப்பில் 3 ராணுவ மெகா பாதுகாப்பு திட்டம்



புதுடெல்லி : நவ. 26, மூன்று மெகா பாதுகாப்பு திட்டங்களை ரூ.1.4 லட்சம் கோடியில் செயல்படுத்த மத்திய அரசு தீவிரமாக களமிறங்கியுள்ளது.

அதன்படி, மேலும் ஒரு விமானம் தாங்கி போர்க்கப்பல், 978 தேஜாஸ் போர் விமானங்கள், 156 பிரசாந்த் இலகுரக போர் ஹெலிகாப்டர்கள் தயாரிக்கும் மூன்று மெகா உள்நாட்டு திட்டங்களுக்கு முதல் கட்ட அனுமதி வழங்கப்படவுள்ளது. இந்த திட்டங்களின் மொத்த மதிப்பு ரூ.1.4 லட்சம் கோடியாகும். நவம்பர் 30-ம் தேதி பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெறவுள்ள பாதுகாப்பு கையகப்படுத்துதல் கவுன்சில் கூட்டத்தில் இதற்கான முக்கிய முடிவு எடுக்கப்படவாய்ப்புள்ளது என்று பாதுகாப்பு துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த கவுன்சில் கூட்டத்தில் மூன்று மெகா திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டால் அடுத்தகட்டமாக பாதுகாப்பு தொடர்பான அமைச்சரவை குழுவிடம் அனுமதி கோரப்படும். அதற்கு முன்னதாக, டெண்டர் மற்றும் வணிகப் பேச்சுவார்த்தை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மெகா திட்டங்களை செயல்படுத்துவதற்கு பல ஆண்டுகள் பிடிக்கும். எனினும், சீனா தனது போர்த் திறனை விரிவுபடுத்தி வருவதன் பின்னணியில் இந்திய ராணுவத்தின் தயார் நிலையை வலுப்படுத்துவதற்கு இந்த திட்டங்கள் மிக முக்கியமானது என்று கூறப்பட்டுள்ளது.

97 தேஜாஸ் மார்க்-1ஏ போர் விமானங்கள் தயாரிப்புக்கு ரூ.55,000 கோடி ஒதுக்கப்படும். கடந்த 2021 பிப்ரவரியில் ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக் உடன் ரூ.46,898 கோடிக்கு ஏற்கெனவே ஆர்டர் செய்யப்பட்ட 83 ஜெட் விமானங்களுடன் இந்த 97 விமானங்களும் சேர்த்துக் கொள்ளப்படும். மேலும் அவற்றின் மொத்த எண்ணிக்கை 180-ஐ தொடும். அதேபோன்று, ரூ.40,000 கோடி செலவில் கொச்சின் ஷிப்யார்டில் 44,000 டன் எடையுள்ள இரண்டாவது விமானம் தாங்கிகப்பலைகட்டுவதற்கு ஆர்டர் கொடுக்கப்படும். இப்பணிகள் நிறைவடைய 8 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் வரை ஆகலாம்.

மேலும், ரூ.16,000 கோடி மதிப்பில் மிக்-29 கே ரக போர் விமானங்களை ரஷ்யாவிடமிருந்து வாங்கவும், பிரான்சிடமிருந்து ரூ.50,000 கோடி மதிப்பில் 26 ரஃபேல்-மரைன் போர் விமானங்களை வாங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்பு துறையை சேர்ந்த உயரதிகாரிகள் தெரிவித்தனர்.

# கறம்பக்குடி அருகே பாம்பு கடித்து பத்தாம் வகுப்பு மாணவி பரிதாப பலி



கறம்பக்குடி,நவ.26-

கறம்பக்குடி அருகே பத்தாம்வகுப்பு படிக்கும் மாணவி பாம்பு கடித்து சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி தாலுகா மீனம்பட்டியை சோந்தவா ரஜினிகாந்த். இவருக்கு மூன்று குழந்தைகள் உள்ளனா, இவரது மூத்த மகள் சந்தியா (15). சந்தியா மோலுடையான்பட்டி அரசு உயா் நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பு படித்து வந்தார்,. கடந்த 18 தேதி வீட்டில் இருந்த சந்தியா திடிரென உடல்நிலை சரியில்லாமல் இருந்துள்ளார், உடனே சந்தியாவை பெற்றோர் தஞ்சாவூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துசென்றனா்.

அங்கு சந்தியாவை பரிசோதித்த மருத்துவா்கள் பாம்பு போன்ற விஷம் தீண்டியுள்ளதாக தெரிவித்தனா, தொடாந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த சந்தியா சிகிச்சை பலனின்றி நேற்று காலை பரிதாபமாக உயிரிழந்தார், இதுகுறித்து வழக்குபதிவு செய்த மழையூா காவல் உதவி ஆய்வாளா் மரியதாஸ் மேலும் விசாரணை நடத்தி வருகிறார், பாம்பு கடித்து பத்தாம் வகுப்பு படிக்கும் மாணவி சந்தியா உயிரிழந்த சம்பவம் அந்த பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## தென்காசிக்கு வருகை தந்த

# திமுக துணை பொதுச்செயலாளர் எம்.பி ராசா-வுக்கு எம்எல்ஏ ராஜா தலைமையில் உற்சாக வரவேற்பு




சங்கரன்கோவில், நவ.26-

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் நடைபெற்ற மாணவர் அணி கருத்தரங்கில் பங்கேற்பதற்காக கழக துணை பொதுச் செயலாளர் ஆ. ராசா எம்பி தென்காசி மாவட்டத்திற்கு வருகை தந்தார், இந்நிலையில் தென்காசி வடக்கு மாவட்ட சங்கரன்கோவிலுக்கு வருகை தந்த ஆர்.ராசா எம்பிக்கு வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏ தலைமையில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது, அதனைத் தொடர்ந்து வடக்கு மாவட்ட கழக அலுவலகத்திற்கு வந்த ஆ.ராசா எம்பிக்கு வீரவாள் மற்றும் நினைவு பரிசுகள் வழங்கப்பட்டது.

இந்தநிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தங்கவேலு, யூஎஸ்டி சீனிவாசன், பரமகுரு ,மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் முத்துச்செல்வி, மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் செண்பகவிநாயகம், மாவட்ட அவைத் தலைவர் பத்மநாதன் ,மாவட்ட பொருளாளர் சரவணன், மாவட்ட துணைச் செயலாளர்கள் மனோகரன், ராஜதுரை, புனிதா, பொதுக்குழு உறுப்பினர்கள் வேல்சாமி பாண்டியன், தேவதாஸ் , சாகுல் ஹமீது,மாரிச்சாமி, பராசக்தி, மகேஸ்வரி, ஒன்றியச் செயலாளர்கள் லாலாசங்கரபாண்டியன், பொன்முத்தையா பாண்டியன், கடற்கரை, பூசைப்பாண்டியன், சேர்மதுரை, வெற்றி விஜயன், பெரியதுரை, ராமச்சந்திரன் , மதிமாரிமுத்து, நகரச் செயலாளர்கள் பிரகாஷ் , புளியங்குடி எ.அந்தோணிசாமி, பேரூர் கழகச் செயலாளர்கள் குரு, ரூபிபாலசுப்ரமணியம், மாரிமுத்து சங்கரன்கோவில் நகராட்சி சேர்மன் உமாமகேஸ்வரிசரவணன் ,மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் டிஎம்எஸ். முகேஷ், உதயகுமார், வக்கீல் பிச்சையா, கே எஸ் எஸ் மாரியப்பன், கிப்ட்சன், சிவசங்கரி ,அப்பாஸ் அலி, புளியங்குடி நகர்மன்றத் தலைவி விஜயாசௌந்தர பாண்டியன், மாடசாமி , பிரேம்குமார், பசுபதிபாண்டியன், சிறுபான்மையினர் அணி மாவட்ட அமைப்பாளர்க. நாகூர்ஹனி, மணிகண்டன் ,சரவணன், சேதுராமன், அமிதாப், சாமுவேல், அழகுதுரை மற்றும் இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கார்த்திக், சரவணன் அன்சாரி, ராஜ், மணிகண்டன் ராஜராஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கொரோனாவுக்குப் பின் களைகட்டும் செட்டிநாடு சுற்றுலா பாரம்பரிய கட்டடங்களைக் கண்டு வியக்கும் சுற்றுலா பயணிகள்



சிவகங்கை : நவ. 26, சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் கொரோனாவுக்கு பிறகு மீண்டும் சுற்றுலாப்பயணிகளின் வருகை களைகட்ட தொடங்கியுள்ளது.

காரைக்குடியை மையமாக வைத்து 96 நகரத்தார் ஊர்கள் உள்ளனர். அங்குள்ள ஒவ்வொரு வீடும் அரண்மனை போல தோற்றம் அளிக்கும் பர்மா தேக்கு மூலம் கலைநயத்துடன் செய்யப்பட்ட நிலை கதவுகள், பிரமாண்ட தூண்கள், ஜப்பான் டைல்ஸ், பெல்ஜியம் கண்ணாடிகள், இத்தாலி மார்பில், ஆத்தங்குடி பூக்கர்கள், கண்கவர் குழல் விளக்குகள் என்று வீட்டின் ஒவ்வொரு பகுதியும் பார்த்து பார்த்து செதுக்கப்பட்டிருக்கும்.

வரவேற்பறை பந்திக்கட்டு, முன்கட்டு, பின்கட்டு என மழைநீர் சேகரிப்பு அமைப்புடன் கூடிய இரண்டு ஏக்கர் வரையிலான பாரம்பரிய பங்களாக்கள் காரைக்குடி சுற்றுவட்டாரத்தில் ஏராளம் காரைக்குடி பாரம்பரிய சுற்றுலாத்தலமாக அறிவிக்கப்பட்ட பிறகு ஆண்டுதோறும் செப்டம்பர் முதல் மார்ச் வரை ஏராளமான வெளிநாட்டு பயணிகள் இந்த வீடுகளை பார்வையிட்டு வந்தனர்.

கொரோனா ஊரடங்கு காரணமாக வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை குறைந்து ஒரு வித தேக்க நிலை நிலவியது. இந்நிலையில் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் காரைக்குடியை நோக்கி படையெடுக்க தொடங்கியுள்ளனர். தமிழர்களின் பாரம்பரிய பண்டிகையான பொங்கலை முன்னிட்டு ஜல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு போன்ற போட்டிகளை காண வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் ஆர்வம் காட்டுவர்என்பதால்இனி சுற்றுலா களைகட்டும் என்று அப்பகுதியினர் தெரிவித்தனர்.

# அமைச்சர் மனோ தங்கராஜின் நாட்கள் எண்ணப்படுகின்றன : அண்ணாமலை ஆவேசம்

மதுரை : நவ. 26, "திமுகவில் கோழைகள் மட்டுமே உள்ளனர். பிரதமர் குறித்த ட்வீட்டை அழித்துவிட்டு ஓடியவர் மனோ தங்கராஜ். அவரின் நாட்கள் எண்ணப்பட்டு வருகிறது" என பாஜக தலைவர் அண்ணாமலை கடுமையாக விமர்சித்துள்ளார்.

ஆவின் பால் தொடர்பாக அமைச்சர் மனோ தங்கராஜ் மற்றும் அண்ணாமலை இடையே வார்த்தைப் போர் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்த நிலையில் மதுரை தனியார்நிகழ்ச்சிஒன்றில் கலந்துகொண்ட பிறகு செய்தியாளர்களிடம் பேசிய அண்ணாமலை, "திமுகவில் கோழைகள் மட்டுமே உள்ளனர். பிரதமர்குறித்தட்வீட்டை அழித்துவிட்டு ஓடியவர் மனோ தங்கராஜ். தமிழ்நாட்டு அரசியலில் அடிப்படையில் ஒரு நாகரிகம் தேவை.

திமுகவினர் அவதூறுகளை அள்ளி வீசுகின்றனர். காமராஜரை அவதூறு மூலம் தான் தோற்கடித்தனர். ஒவ்வொரு ஆவின் பால் பாக்கெட்டுக்கும் 10-12 ரூபாய் கொள்ளை அடிக்கின்றனர். தனியார் பால் கம்பெனிகளுக்கும் ஆவினுக்கும் மறைமுக தொடர்புஉள்ளது. மனோ தங்கராஜ் அரசியலில் இருப்பது தமிழக மக்களின் சாபக்கேடு. மனோ தங்கராஜ் நாட்கள் எண்ணப்பட்டு கொண்டிருக்கின்றன. அவர் ஐடி துறையில் இருந்தபோது அவர் செய்த ஊழலை ஆளுநரிடம் கொடுத்து உள்ளோம்.

நாங்கள் மக்களுக்காக அரசியல் செய்கிறோம். எனவே அதுகாரசாரமாக தான் இருக்கும். மரியாதை கொடுத்தால் நாங்களும் மரியாதை கொடுப்போம். இது பழைய பாஜக அல்ல. நானும் பழைய பாஜககாரன் அல்ல" என்றார் காட்டமாக.

# அரியலூரில் நடைபெறும் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்த முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு



அரியலூர்,நவ.26-

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஒன்றியம், ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி வாரணவாசி, அரசு உயர்நிலைப்பள்ளி வாரணவாசி மற்றும் அழகப்பா சிமெண்ட் அரசு மேல்நிலைப்பள்ளி கீழப்பழுவூர் ஆகிய இடங்களில் நடைபெற்ற வாக்காளர் பட்டியலில் பெயர் நீக்கம், பெயர் திருத்தம் மற்றும் முகவரி மாற்றம் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு, விண்ணப்பங்கள் பெறும் முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

01.01.2024 நாளை தகுதி நாளாகக் கொண்டு 2024-ஆம் ஆண்டில் 18 வயது பூர்த்தியடைந்த அனைவரும் தங்கள் பெயரினை சேர்க்கவும், இறந்த நபர்கள், நிரந்தரமாக முகவரி மாறியவர்களை வாக்காளர் பட்டியலில் நீக்கம் செய்திடவும், ஏற்கனவே வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள வாக்காளர்கள் தங்கள் முகவரியில் மாற்றம் செய்யவும், வாக்காளர்களின் பெயர், முகவரி, வயது மற்றும் இதர வகைகளில் உள்ள பிழைகளை திருத்தம் செய்வதற்குரிய சிறப்பு முகாம்கள் கடந்த 04.11.2023 (சனிக்கிழமை) மற்றும் 05.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய தினங்களில் அரியலூர் மாவட்டத்திற்குட்பட்ட 2 சட்டமன்ற தொகுதிகளின் வாக்குச்சாவடி மையங்களில் நடத்தப்பட்டு பொதுமக்களிடமிருந்து படிவங்கள் பெறப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக நேற்று திருமானூர் ஒன்றியம், ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி வாரணவாசி, அரசு உயர்நிலைப்பள்ளி வாரணவாசி மற்றும் அழகப்பா சிமெண்ட் அரசு மேல்நிலைப்பள்ளி கீழப்பழுவூர் ஆகிய இடங்களில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்;. இம்முகாமானது அரியலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 306 வாக்குச்சாவடி மையங்களிலும், ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 290 வாக்குச்சாவடி மையங்களிலும் என மொத்தம் 596 வாக்குச்சாவடி மையங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த முகாம்கள் நடைபெறுகிறது.

மேலும், இன்றையதினம் வழங்க இயலாத வாக்காளர்களுக்கு நாளை 26.11.2023 வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கத் திருத்த முகாம் நடைபெற உள்ளது. எனவே, பொதுமக்கள் மேற்கண்ட நாளில் நடைபெற உள்ள சிறப்பு முகாம்களில் கலந்துகொண்டு தங்களுக்கான படிவங்களை பூர்த்தி செய்து வழங்கி பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா தெரிவித்தார். இந்நிகழ்வில், அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் ராமகிருஷ்ணன், அரியலூர் வட்டாட்சியர் ஆனந்தவேல் மற்றும் வருவாய்துறை அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# தென்காசியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 47- வது பிறந்தநாளில் அரசு மருத்துவமனையில் ரத்த தானம்



தென்காசி,நவ.26-

தென்காசி வடக்கு மாவட்டம் சங்கரன்கோவில் இளைஞர் அணி சார்பாக அரசு மருத்துவமனையில் ரத்ததான முகாம் நடைபெற்றது, இதில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏ அறிவுறுத்தலின் பேரில் இளைஞரணி மாவட்ட பொறுப்பாளர் டி.எம்.எஸ்.மகேஷ் தலைமையில், மாவட்டத் துணை அமைப்பாளர் மணிகண்டன் முன்னிலையில் 47 இளைஞர் அணி தொண்டர்கள்ரத்ததானம் வழங்கினர்.

நிகழ்ச்சியில் ராஜராஜன், கார்த்திக், அன்சாரி, புளியங்குடி சதீஷ், நகர்மன்றஉறுப்பினர் காவல்கிளி, கணேசன், ராஜ பவல், ரத்தினம், சிவகிரி ராம்குமார், களப்பகுளம் மூர்த்தி, வெள்ளத்துரை, சத்யராஜ், வாசு சுரேஷ், மோசிவ், முத்தையா, சுனில் பிரபாகர் ,மகேந்திரன் ராஜ், ஜி. முத்துக்குமார், பி.சி. சுரேஷ், குருவிகுளம் அருண்குமார், சங்கரன்கோவில் அரசு மருத்துவர்கள் செந்தில் சேகர், ராஜாமணி, தலைமை செவிலியர் மார்த்தாய், செவிலியர் சுபத்ரா, மாஸ்டர்ஜான்ராஜ், ஆகியோர் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கிய இளைஞரணி தொண்டர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கி கௌரவித்தனர்.




# கார்த்திகை தீபம்: திருவண்ணாமலையில் 30 லட்சம் பக்தர்கள் குவிந்தனர்

# ரூபாய் 1.4 லட்சம் கோடி மதிப்பில் 3 ராணுவ மெகா பாதுகாப்பு திட்டம்





# தமிழகத்தில் சராசரியாக நாள் ஒன்றுக்கு 50 பேருக்கு டெங்கு உறுதி


சென்னை / புதுக்கோட்டை | 26.11.2023 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

யஷ் பால் , இந்திய அறிவியலாளர் (பி.1926) (இ.2017)



கோவிந்த் பன்சாரே , இந்திய இடதுசாரி அரசியல் செயற்பாட்டாளர் (பி.1988) (இ.2015)



வேலுப்பிள்ளை பிரபாகரன் , தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் (பி.1954) (இ.2009)



## இன்றைய நினைவு நாள்

சா. கிருஷ்ணசுவாமி ஐயங்கார் , இந்திய வரலாற்றாளர், திராவிடவியலாளர் (பி.1871) (இ.1946)



ஜி. வரலட்சுமி , தென்னிந்தியத் திரைப்பட நடிகை (பி.1926) (இ.2006)



ஐராவதம் மகாதேவன் , தமிழக கல்வெட்டு ஆய்வாளர் (பி.1930) (இ.2018)



## அரசியல் சாசன தினம் (இந்தியா)